பககங்கள் : பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

ஒளி 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 02 | புதன்கிழமை | (14-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 117

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஸ்ரீ.ல.சு.கட்சி - ஜே.வி.பி. முறுகல் நிலை

# அமைச்சுக்களை பங்கீடு செய்வதில் சிக்கல்

# ஐ.ம.சுதந்திர முன்னணி பிளவுபடும் அபாயம்!

## அவசரக் கூட்டத்திற்கு சந்திரிகா அழைப்பு

(நமது நிருபர்)

நடந்து முடிந்த 13ஆவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகக்கூடிய 105 ஆசனங்களைப் பெற்று அரசமைத்து நான்கு தினங்களுக்குள் முன்னணியின் பிரதான கூட்டுக் கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பில் எழுந்துள்ள முறுகல் நிலையால் முன்னணி பிளவுபடும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறப்புத் தளபதி ரமேஷ் கண்காணிப்புக் குழுவுடன் சந்திப்பு

### படைத்தரப்பு சந்திப்புக்கும் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

இலங்கை .இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துகொடுக்குமாறு இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்கு குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பிரதித் தலைவர் பிறிசன் ரம்புசன்னுடன் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி நடத்திய பேச்சுவார்த்தையின்போதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் தளபதியின் வேண்டுகோள் குறித்து படைத்தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக அவர்களின் பதிலைத் தாம் எதிர்பார்த்திருப்பதாக கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பிரதித் தலைவர் தெரிவித்தார். (த-61)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் வெள்ளியன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைபரம் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராய்வதுடன், கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், சபாநாயகர் தெரிவு, மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைமைகள் என்பன குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. (த-61,10)

## சிறுவர்களைப் புலிகள் விடுவித்தமை அவ் அமைப்பில் ஏற்பட்ட திருப்பம்

### யுனிசெவ் அறிக்கை

(நமது நிருபர்)

18 வயதிற்குக் குறைந்த நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் போராளிகளைமட்டக்களப்பில் விடுவித்தது போல் வடக்கிலும் போராளிச் சிறுவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும் என்று யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெச்சைடன் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணா அணியில் சேர்த்து வைத்திருந்த போராளிச் சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் விடுதலைப் புலிகள் கையளித்தமை தொடர்பாக யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கிழக்கில் போராளிச் சிறுவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்தமையானது அவர்களது அமைப்பில் ஏற்பட்டுள்ள புதியதொரு திருப்பமாகும். விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு வாகரையில் வைத்து

## 269 போராளிகள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

மட்டு-அம்பாறைப் பிரதேசம் கருணாவின் பிடியில் இருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து மீட்பு அணியுடன் இணைந்துகொண்ட பல போராளிகள் அவர்களது விருப்பின் பேரில் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதன் ஓரங்கமாக நேற்று வாகரைப் பிரதேசத்தில் மீட்பு அணியுடன் இணைந்துகொண்ட 18 அகவைக்கு மேற்பட்ட 33 பெண்போராளிகளும், 68 ஆண் போராளிகளுமாக 101 போராளிகள் கதிரவெளிப் பாடசாலையில் வைத்து காலை 7.00 மணியளவில் அவர்களது பெற்றோரிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து காலை 10 மணியளவில் 18 அகவைக்கு உட்பட்ட 113 பெண் போராளிகளும் 55 ஆண்போராளிகளும் மட்டு. அம்பாறை யுனிசெவ பிரதிநிதியூடாக அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

18 அகவைக்குக் குறைந்த 168 போராளிகளை அவர்களது பெற்றோர் அழைத்துச்செல்வதற்கான ஒழுங்குகளை யுனிசெவ மேற்கொண்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிகள் இணங்கிச் செயற்பட மறுத்தால் மற்றொரு தேர்தல் தவிர்க்க முடியாதது

### அஸ்கிரிய மகாநாயக்க தேரர் எச்சரிக்கை

அண்மையில் நடந்துமுடிந்த 13ஆவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நாட்டில் உள்ள இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இணைந்து செயற்படத் தவறுமானால், மற்றொரு பொதுத் தேர்தலை விரைவில் சந்திக்க நேரிடும் என்று அஸ்கிரிய மகாநாயக்க தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று அஸ்கிரிய மகாநாயக்கரை இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்துக் கலந்துரையாடியபோதே தேரர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இன்றைய அரசியல் நிலை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் தேரர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் மிக நீண்டகாலமாக நிலவிவந்த இனப்பிரச்சினை தொடர்பான தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முதன் முதல் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே. இந்நிலையில், சமாதான முயற்சியை அவரே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு உரித்துடையவராகவும் இருக்கிறார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில், அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு இயங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால், இக்கட்சிகள் யாவும் ஓரளவு புரிந்துணர்வுடனும், ஒருமைப்பாட்டுடனும் செயற்படவேண்டும். தவறினால் இரண்டொரு வருடத்தில் இன்னுமொரு பொதுத்தேர்தலைச் சந்திக்கவேண்டி வரும் என அஸ்கிரிய மகாநாயக்க எச்சரித்துள்ளார். (ம-121)

### மட்டக்களப்பு களுவான்சேனையில்

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் மூன்று சடலங்கள் நேற்று மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவான்சேனைக் கடற்கரைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட 3 சடலங்களை ஏறாவூர்ப் பொலிஸார் நேற்று கண்டெடுத்துள்ளனர்.

தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட இம் மூன்று சடலங்களும் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையிலும், வாய்க்குள் துணி திணிக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதைகுழியொன்றில் இருந்து நேற்று மீட்கப்பட்ட மூன்று சடலங்களில் ஒரு சடலம் களுவான்கேணி வாசியான மாணிக்கவேல் சபாரட்ணம் (வயது 32) என்று இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய இரு சடலங்களும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக சபாரட்ணத்தின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

### கணிசமான வாகனங்கள் எரிப்பு

## கைவிட்டுச் சென்ற ஆயுதங்களை சேகரிக்கும் பணியில் புலிகள்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணா அணியினரின் பாவனையிலிருந்த பெருமளவு வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகள் மட்டு. அம்பாறைக்குச் சென்றதையடுத்து கருணா அணியினர் தமது முகாம்களில் இருந்து வெளியேற முன்னதாக கணிசமான வாகனங்களை எரியூட்டியுள்ளனர்.

குளிரூட்டப்பட்ட வாகனங்கள், பிக்கப் வாகனங்கள், எல்வ் மற்றும் கனரக வாகனங்கள் உட்பட கணிசமான வாகனங்களை எரியூட்டிய பின்னரே கருணா அணியினர் தப்பிச்சென்றுள்ளனர்.

இதேவேளை, கருணா அணியினர் இறுதியாகத் தங்கியிருந்த தொப்பிக்கல காட்டுப்பகுதியில் இருந்த முகாமும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# உணவுத் தரங்களை சோதனையிட புதிய சட்டம்

(கொழும்பு)

தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்வதற்காக விளம்பர மோசடிகளில் ஈடுபடும் நபர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கும் புதிய சட்ட திட்டங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பிரதம உணவு கட்டுப்பாட்டாளரான எஸ்.நாகையா தெரிவித்துள்ளார்.

ஒரு சில வர்த்தகர்கள் உணவின் தரத்தை சோதிப்பது இல்லை. ஆனால் அவற்றின் தரம்பற்றி விளம்பரம் செய்து வருகின்றதாக சுட்டிக்காட்டிய அவர்,

இதனைத் தடுப்பதற்காக தரப் பரிசோதனை கட்டாயமாக்கப்படும். இந்தச் சட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் அமுலுக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

(தி-60,10)

# கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் சித்திரப் பாவை நிகழ்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு, சித்தானந்தா இந்து இளைஞர் அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் "சித்திரப் பாவை" என்ற தமிழ்-சிங்கள புத்தாண்டு நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதிக வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் - சிங்கள பாரம்பரியங்களைச் சித்தரிக்கும் பல நிகழ்ச்சிகள் மேடையேற்றப் படவுள்ளன.

(தி-60,10)

# ஆத்திரமடைந்த ரணதுங்க பதவிகளைத் துறந்தார்

(கொழும்பு)

அமைச்சு பதவி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க அப்பதவி கிடைக்காத காரணத்தினால் ஆத்திரமடைந்து தனது பதவிகள் அனைத்தையும் துறந்தார்.

விளையாட்டுத்துறையை மறுசீரமைக்கும் நோக்குடன் மனக்கோட்டை கட்டி இருந்த இவருக்கு, கடைசி நேரத்தில் உல்லாசப் பயணத்துறைப் பிரதி அமைச்சர் பதவியை வழங்கவே ஜனாதிபதி முன்வந்தார்.

இதனால் மனக்கவலை அடைந்துள்ள அவர், தனது ஏனைய அனைத்துப் பொறுப்புக்களிலும் இருந்தும் விலகி, தாம் வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்குச் சேவையாற்றப் போவதாக கங்கணம் கட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளாது வெளிநடப்புச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் விளையாட்டு அமைச்சராக ஜீவன் குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

(தி-63)

# சார்ளி மகேந்திரன் பதவி இராஜினாமா

(கொழும்பு )

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தரப பிரதிநிதி யாகக் கடமையாற்றி வந்த சார்ளி மகேந்திரன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாகப் கடமையாற்றி வந்தார்.

மக்கள் விடுதலைமுன்னணியும் ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியும் கூடடுச்சேர்ந்து ஆட்சி அமைத்ததன் காரணமாகவே இவர் இப் பதவியை இராஜினாமாச் செய்ததாக தெரிய வருகிறது.

இப் பதவிக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

(தி-63)

## வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24ம் திகதி வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 16,19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

(தி-63)

## வருடாந்த உற்சவம்

(பொன்னாலை)

இணுவில் கிழக்கு அருணகிரிநாத சுப்பிரமணியர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் 10 தினங்களுக்கு இடம்பெறவுள்ளது.

(உ-49)

## கொடியேற்றம்

(பொன்னாலை)

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது

(உ-49)

## புதிய கற்கைகள் ஆரம்பம்

(பொன்னாலை)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில், சிறுவணிக முகாமைத்துவம், உயர் தொழில் ஆங்கிலக் கற்கைநெறி ஆகியன எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாவுள்ளன.

(உ-49)

## சாமிமலையில் வெள்ள அபாயம்

(அம்பகமுவ)

சாமிமலையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையினால் அப்பகுதியில் உள்ள பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களில் குடியேறியுள்ளன.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

(தி-61)

## ஏகாதசி உற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஏகாதசி விரதத்தை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகம், ஆராதனைகள் இடம் பெறவுள்ளன.

(தி--49)

# தாரண வருஷப் பலன்கள

(திருக்கணித முறைப்படி)

**மேடம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால**

மேடராசியில் பிறந்தவர்களுக்கு பல வகையான சிறப்புக்களுடன் புதுவருஷம் பிறக்கின்றது. சனி, குரு சஞ்சாரங்கள் எல்லா அனுகூலங்களையும் கொடுக்கும். தொழில் சிறப்பு, வருவாய் முதலியன அதிகரிக்கும். தொடங்கும் கருமங்கள் இலகுவில் இனிதாக அனுகூலமாகும். உறவினர்களிடையே நெருக்கமான தொடர்புகள் காணப்படும். வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் நடக்கும். தூரப்பிரதேச பிரயாணங்கள் கைகூடும். திருமணத்தை எதிர்நோக்குவோர் மிக்க மகிழ்ச்சியுடன் கருமத்தை எதிர்கொள்வார். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் சிரத்தையும், ஆர்வமும் உண்டாகும். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் நல்ல விலை போகும். பணம் சேரும். பெண்களுக்கு மகிழ்சிகரமான வருடமாக அமையும். ஆவணி மாதம் குரு, சனி மாற்றம் அடைவதால் நற்பலன்கள் சிறிது குறையும். மாணவர்களுக்கு வருட முற்பகுதி சிறப்பானது.

**இடபம்: கார்த்திகை 2,3,4-ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

இவர்களுக்கு ஏழரைச்சனி பிற்பகுதி நடந்துகொண்டிருக்கும். வருட முற்பகுதியில் நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். மனநிம்மதி குறைவும், அலைச்சலும் தலைதூக்கியபடி இருக்கும். கடன் தொல்லைகள் வலுக்கும்.தொழில் முயற்சிகளிலும் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடையாது. குடும்பத்திலும் மனக்கசப்புகள் தோன்றலாம். ஆவணி மாதம் ஏழரைச்சனி நீங்குவதுடன், குரு சஞ்சாரமும் சிறப்பாக அமைகிறது. அதன் மேல் தண்ணீரில் தத்தளித்தவர் கரை சேர்ந்தது போன்ற உணர்வுகள் தென்படும். வருமானம் அதிகரிக்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். வருட முற்பகுதியில் இருந்த வேலைப்பழு நீங்கி உற்சாகமாக தொழிலில் ஈடுபடுவர். வருட முற்பகுதியில் தடைப்பட்டிருந்த மங்கள கருமங்கள் கைகூடும். வியாபாரத் துறையினருக்கு மந்தநிலையிலிருந்த வியாபாரங்கள் வருட முற்பகுதியில் முன்னேற்றமாக அமையும். பரீட்சையில் சித்தி, புலமைப்பரிசில் என்பன கிட்டும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4-ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

மிதுன ராசியில் ஜனனமானவர்களுக்கு பலவகையாலும் சோதனை நிறைந்த ஆண்டாகவே தென்படுகிறது. ஏழரைச்சனி தொடர்கிறது. வியாழ சஞ்சாரமும் நன்றாக இல்லை. தொழில் விஷயங்களில் வேலைப்பழு அதிகரிக்கும். தேகசுகம், குடும்பசுகம் அடிக்கடி பாதிப்படைவதால் மருத்துவச்செலவு அதிகரிக்கும். கடன் தொல்லைகளும் கட்டுக்கடங்காமல் போகும். நினைத்த கருமங்கள் தடைப்படும். பிறநாட்டுப் பிரயாண முயற்சிகள் ஏமாற்றத்தைக் கொடுக்கும். வாகன விபத்துக்கள் பற்றி அவதானம் தேவை. ஆவ்ணியில் குரு மாற்றத்தின் மேல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு கஷ்டமான இடமாற்றங்களும், வேலைப்பழுவும் இருக்கும். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். மணவாழ்க்கையை எதிர்நோக்குவோர் ஏமாற்றமடைவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். மாணவர்களுக்கு வருட முற்பகுதியில் ஊக்கம் குறையினும் பிற்பகுதி நற்பலனைக் கொடுக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

இவ்ராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி தொடர்கிறது. எனினும் வியாழ பகவானின் சஞ்சாரம் சற்று ஆறுதலைக் கொடுக்கும். தொடங்கும் கருமங்கள் சற்று தாமதமாக நிறைவு பெறும். தொழில் முயற்சிகளில் பிரயாசைக்கேற்றலாபமுண்டு. பொருளாதார நிலை மத்திமமாகவே இருக்கும். நண்பர்கள், உறவினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். தேகசுகத்தை அவதானமாகப் பேணவும்.

**வேதாகம சோதிட பூசணம்**
**(சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்)**

ஆவணி மாதம் குருமாற்றத்தின் மேல் நற்பலன்கள் மேலும் குறையும். உத்தியோகத்தர்களுக்கு உதவிகள் கிடையாது. பலவகையான சிரமங்களை எதிர்நோக்க நேரிடும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு தாமதமாகவே கருமம் கைகூடும். வியாபாரிகளுக்கு குறைந்த வருவாய்களே காணப்படுகிறது. மாணவர்கள் முயற்சிக்கேற்ப நன்மை பெறுவர். விளையாட்டுகளில் கூடுதலாக ஈடுபடுவர்.

*(தொடரும்)*

# வெடிபொருட்களைக் கடத்தி செல்ல முற்பட்ட படைவீரர் கைது

(வவுனியா)

வவுனியாவில் இருந்து களுத்துறைக்கு வெடிகுண்டுகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட இராணுவ வீரர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி இராணுவ வீரரால் வவுனியாவில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 2 பெரும் வெடிகுண்டுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விடுமுறையில் வீடு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டபோதே இந்த இராணுவ வீரர் வெடி பொருட்களைக் கடத்திச் சென்றதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(உ-64,10)

# அரசியல் கைதிகளுக்கு பூரண பாதுகாப்பு

**-சிறைச்சாலை ஆணையாளர் உறுதி**

(கொழும்பு)

சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் எதிர்நோக்கி வரும் அச்சுறுத்தல்களைப் போக்கி, அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்க சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சில சிறைகளில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு, தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகளினாலும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களினாலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே ஆணையாளர் இந் நடவடிக்கையினை எடுத்துள்ளார்.

விளக்கமறியலில் உள்ளவர்களுக்கும், கைதிக்கும் எவ்விதமான இடையூறுகளையும், எவரும் செய்ய முடியாது. அவ்வாறு செய்வதனால் அது அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்.

இவ்வாறான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின்போது குற்றவாளிகளாக இனங்காணப்படும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

(தி-63

அனைவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**நியூ றெஸ்ற் ஹவுஸ்**

**உணவு தங்குமிடம் விருந்துபசரணை**

**வாருங்கள் வந்து மகிழ்வுறுங்கள்**
**எங்கும் வாழ் மக்களுக்கு!**

இயற்கை அமைவிலே! இனிய அகத்திலே! வந்தோரை வரவேற்று விருந்தோம்பி சிறப்பிக்க; நாற்பது வருடங்களுக்குமேல் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையிலே கீழைத்தேய, மேலைத்தேய, சீன உண்வு வகைகளில் இணையற்ற சாதனை படைத்தவர்கள், அரசினர் முதல், மதபீடங்கள், பொதுமக்கள் யாவர்க்கும் உயர்ந்த உன்னத சேவை வழங்கியவர்கள், யாழ் வாடிவீடு, காங்கேசன்துறை வாடிவீடு, விருந்தினர்விடுதி, பருத்தித்துறை வாடிவீடு ஆகியவற்றின் நிர்வாக முன்னோடிகள். பத்தி என்று செல்லமாக அழைக்கப்படும் யாழ் வாடிவீடு *(Rest House)* அதிபர் T.பத்திநாதன் அவர்களின் வாரிசுகள்.

**வாருங்கள் வந்து மகிழ்வுறுங்கள்**

இல: 19, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி- யாழ்ப்பாணம்

T.P: 021 222 5928

*(மனித உரிமை ஆணைக் குழுவுக்கு முன்பாக)*

# வெகுண்டெழுந்தது மே.இ.அணி
# சுருண்டது இங்கிலாந்து அணி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக அன்ரி குவாலில நடைபெறும் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் இங்கிலாந்து அணி பலத்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் முதலாவது இனிங்ஸில் பெற்ற 5விக்கெற் இழப்பிற்கு 751ஓட்டங்களுக்கு பதிலளித்து துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவின் போது அதன் முதல் இனிங்ஸில் 5விக்கெற்றுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுளளது. முன்னதாக தனது முதலாவது இனிங்ஸை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி பிரைன்லாரா, ஜேக்கபீஸ் ஆகியோரின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் ஸ்திர நிலையை அடைந்தது. றிட்லி ஜோக்கப்லஸ் ஆட்டமிழக்காமல் 107ஓட்டங்கைளப் பெற்றதுடன். வீழ்த்தப்படாத 6வது விக்கெற் இணைப்பாட்டமாக லாராவுடன் 282ஓட்டங்களையும் பகிர்ந்து கொண்டார். இவர்களைவிட 90ஓட்டங்களைப் பெற்ற ராம்நரேஸ் சர்வான் 62ஓட்டங்களைப்பெற்ற கிறிஸ் கெயினும் மேற்கிந்திய தீவுகள் அணியின் மொத்த எண்ணிக்கைக்கு மேலும் வலுவூட்டினர்.

இப் போட்டியில் இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடும் நிலையை தடுப்பதற்கு இங்கிலாந்து அணி அதன் முதலாவது இனிங்ஸில் மேலும் 410 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. இங்கிலாந்து அணி சார்பாக மார்க் புச்சர் 52ஓட்டங்களையும், அன்ருபிளிஸ்ரோல் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் ஜோன்ஸ் ஆட்டமிழக்காமல் 32ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். (யே-121,68)



ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இடம்பெற்ற காளை அடக்கும் போட்டி ஒன்றில் அந்நாட்டின் பிரபலமான காளையடக்கும் வீரர் அந்திரே யாஸ் மூர்க்கமாக வந்து மோதும் காளை ஒன்றை அடக்க முனைவதைப் படத்தில் காண்கிறீர்கள். இதேவேளை பார்சிலோனா நகரில் காளைகளை அடக்கும் போட்டி நிறுத்தப்பட வேண்டும் என நகரசபைதீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

# 43 பவுண்டரிகள் 4சிக்ஸர்களோடு 400 குவித்த பிறையன் லாரா !

இங்கிலாந்து அணிக்கெதிராக அன்ரிகுவாவில் நடைபெறும் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் பிறையன் லாரா ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைக் குவித்து டெஸ்ட் இனிங்ஸிற்காக உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



இதன் மூலம் அவுஸ்திரேலிய வீரரான மத்தியூ ஹெய்டின் கடந்த வருடம் சிம்பாப்வேக்கு எதிராகக் குவித்த 380ஓட்டங்கள் என்ற சாதனை முறியடிக்கப்பட்டது. 1994ல் அப்போதைய உலக சாதனையாக ஹரி சோபர்ஸ் வசம் இருந்த 365 ஓட்டங்கள் என்ற சாதனையை இதே மைதானத்தில் இதே அணிக்கெதிராக லாரா முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதல்தரக் கிரிக்கெற் போட்டிகளில் ஒரு இனிங்ஸில் ஆகக்கூடுதலான 501 ஓட்டங்கள என்ற உலக சாதனையும் லாரா வசமே இருந்து வருகின்றது.

இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் 3டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிய லாரா சிக்ஸர் ஒன்றை அடித்து ஹெய்டினின் சாதனையை சமப்படுத்தினார். லாராவின் 400ஓட்டங்களில் 42பவுண்டரிகளும், 4சிகஸர்களும்அடங்கியிருந்தன.

இந்த சாதனை நிலைநாட்டப்பட்டதை நம்புவது கடின்மான போதிலும் அதனை நிலை நாட் டியமை மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக லாரா கூறியுள்ளார். லாரா உலக சாதனையை நிலை நாட்டியதுடன் இங்கிலாந்து வீரகள் அனைவரும் தமது கௌரவத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.(யே-121,68)

# டெனிஸ் போட்டியில் டேவன் போட் சம்பியன்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் நடைபெற்ற 5 இலட்த்து 85 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசுத்தொகைக்கான டெனிஸ சுற்றுப்போட்டியின் மகளிர் பிரிவின் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று அமெரிக்கா வின் லின்டே டேவன் போட் சம்பியன் பட்டத்தினை சுவீகரித்துக் கொண்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தஇறுதி ப்போட்டியில் உலக டெனிஸ் வீராங்கனைளுக்கானதரப்படுத்தலில் நான்காவது நிலையில் இருக்கும் டேவன்போட் தரப்படுத்தல் பட்டியலில் 3வது நிலையில் இருக்கின்ற பிரான்ஸ் வீராங்கனையான அமெலீமே றிஸ்மோவை 6:4,6:4 வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தினை வெற்றி கொண்டார். (யே-68)

# எல்லேப் போட்டிகள் நாளையும் மறுதினமும்

யாழ.மாவட்டமட்ட ஆண்களுக்கான எல்லேப்போட்டிகள் நாளை காலை 8.00மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்ரங்கில் ஆரம்பமாகவுள்ளன. யாழ்.மாவடடத்தில் உள்ள பிரதேச செயலக பிரிவின் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளன.

இப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ள அணிகளை அன்றைய தினம் குறித்த நேரத்திறகு வருகை தருமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.இறோகான் இராஜசிங்கம் கேட்டுள்ளாா.

மேலும் பெண்களுக்கான மாவட்டமடட எல்லேப் போட்டிகள் நாளை மறுதினம் காலை 8.00மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்(யே-68)

# டெனிஸ் தரப்படுத்தலில் பெல்ஜிய வீராங்கனைகள்

உலக டெனிஸ் வீராங்கனைகளுக்கான தரப்படுத்தல் பட்டியலில் பெல்ஜிய வீராங்கனையான ஜஸ்ரின் ஹெனின் ஹாடின் தொடர்ந்தும் முதலாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுளளார். இதன்படி 7ஆயிரத்து 367 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு முதலாவது நிலையில் திகழ்கின்றார். ஹெனின்.

இதேவேளை, 6ஆயிரத்து 280 புள்ளிகளைப்பெற்றுக் கொண்டுள்ள மற்றும் ஒரு பெல்ஜிய வீராங்கனையான கிம்னைஸ்டஸ் தொடர்நதும் இரண்டாவது நிலையில் இருக்கின்றார். சென்ற முறை தரப்படுத்தல் பட்டியலில் 7வது நிலையில் இருந்த அமெ. வீரங்கனையான செரீனா வில்லியம்ஸ் இம்முறை 9வது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். 9வது இடத் தில் இருந்த ரஷ்ய வீராங்கனை யான நாட்டியா. பெற்ரோவா பட்டி யலில் 7வது இடத்திறகு முன்னேறி இருக்கின்றார். பிரான்ஸ் வீராங்கனையான அமவீமொறிஸ் 3வது இடத்திலும் அமெ. வீராங்கினையான வீன் சே டேவன் போட் 4வது இடத்திலும் தொடர்ந்தும் இருக்கின்றனர். (யே-68)


சங்குநாதம்




13வது பாராளுமன்ற பொதுத்தேர்தல்
டொறிங்ரன்
தமிழன் என்ற பெயரால் தூக்கி எறியப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர்
கோவையூர் ஜெயன்
கே.வி. குணசேகரம் எழுதும்
கல் தூண்கள்
ஆலடி மாநாடு
வியாசர் பதில்கள்
சினிமாச்சிதறல்
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்
விலை ரூபா: 16.00


# விளையாட்டுச் செய்திகள்



கமரூன் அணியின் பிரபல கால்பந்தாட்ட வீரர் ஹென்றி பூங்கா கமரூனில் நடைபெற்ற பயிற்சிப் போட்டி ஒன்றின் போது அக்ரோபாட் என்றழைக்கப்படும் காற்றில் பறந்து பந்தை கோல் எல்லைக்குள் அனுப்பும் உதை ஒன்றைச் செய்வதைப் படத்தில் காண்கிறீர்கள். ஆபிரிக்க நாடுகளின் உதைபந்தாட்ட அணிகளில் கமரூன் அணி மிகப் பிரபலமானது.

## இன்று ஒரு தகவல்

### புத்தாண்டும் போலித்தனங்களும்

இன்று காலையில்ஒருவர் தன் எதிரே வந்து ஒருவரைப் பார்த்து HAppy new year என்றார். உடனே அவரும் same to you என்று இவரிடம் கூறிவிட்டுப் போனார். இன்று யாரைப் பார்த்தாலும் மகிழ்ச்சி பொங்கும் புத்தாண்டு வாழ்த்து என்று சொல்லிக் கொள்வது நமது பழக்கம். இதைப் பற்றி ஒரு பெரியவர் என்ன சொல்கிறார் தெரியுமா? இப்படி சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை. என்கிறார்.

இனறு ஒருநாள் மட்டும் "மகிழ்ச்சி தரும். புத்தாண்டு." என்று கூறி விட்டால் உடனே இந்த வருடம் முழுவதும் நமக்கு மகிழச்சியாக இருந்து விடப்போகின்றது என்று ஆகிவிடுமா? மனிதர்கள் வாழ்நாள் முழுவதையும் இப்படிப் போலித் தனங்களாகவே கழித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது அவரது கருத்து.

ஒரு மனிதனுக்குப் போன வருடம் இருந்த ஆயுள் காலத்தை விட இந்த வருடம் உள்ள ஆயுள் காலம் குறைகிறது. ஒருவருடம் குறைந்துவிட்டது. அதுமட்டுமல்ல. ஒவ்வொரு மனிதனுடைய ஆயுள் காலமும் நொடிக்கு நொடி குறைந்து கொண்டேவருகிறது. அப்படி இருக்கும் போது இவன் என்னமோ வருடா வருடம் வளர்ந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு வாழ்த்துக் கூறுகிறான்.

காலம் என்ற ஒன்று இருக்கின்றது பாருங்கள் அது நிரந்தரமானது. எல்லையில்லாதது. அழிவில்லாதது. அப்படிப்பட்ட எல்லையில்லாத காலத்தில் மனிதனுடைய வாழ்நாள் என்பது ஒரு சிறிய அணுமாதிரி! இதை மனிதன் வருடம், மாதம், திகதி என்று பிரித்து அதை அனுபவிக்க முயல்கிறான். ஒரு வருடம் போகின்றதாம். அதற்கு விடைகொடுக்கிறானாம. இன்னொரு வருடம் வருகின்றதாம். அதை வரவேற்கின்றானாம.

ஒரே கொண்டாட்டம், கும்பளாம், கலாட்டா, காலத்தினுடைய புனிதத்தன்மையையும், எல்லைக்கு உட்படாத அதனுடைய தன்மையையம் இன்றைய மனிதன் புரிந்து கொளளவில்லை. அதனால் தான் அவனது பேச்சும், செயலும் போலியாக இருக்கிறது. எல்லையற்ற காலத்தை நிமிடக் கணக்கில் அளப்பதற்கு முயற்சிக்கிறான் இவன்.

மனிதன் தன்னுடைய போலி யான வாழ்வை வாழ்வதற்காகத் தான் வருடம், மாதம், வாரம், நாள் என்று வகைப் படுத்தி வைத்திருக்கிறான். காலத்தை எப்படிக் கழித்துக் கொண்டு வருகிறோம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டம் .ஒரு வருடத்திற்கு31,53, 600வினாடிகள் (6060 x24 x 365) இந்த வினாடிகளை நாம் எப்படிச் செலவு செய்கிறோம் என்பதை நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். எத்தனை வினாடிகள் அப்பா அம்மாவுக்கு உதவியாக இருந்திருக்கிறோம்: எத்தனைவினாடிகள் பெரியவர்களை அவமதிக்கிறோம். எத்தனை வினாடிகளை வயிற் றுப்பிழைப்புக்காக செலவிட் டிருக்கிறோம். எத்தனை வினாடிகள், சினிமா, டிராமாவில் போயிற்று ஊர் சுற்றியது எத்தனை வினா டிகள், உருப்படாத புத்தகங்களைப் படித்தது எவ்வளவு வினாடி. உருப்படியான காரியம் செய்தது எத்தனை வினாடி. கணக்குப் போட்டுப் பாருங்கள். விடை என்ன வருகின்றது? அது வெளியில் சொல்வது போல் இருக்கிறது.

சரி சார். இந்த உபதேச மெல்லாம் இருக்கட்டும். இந்தப் புத்தாண்டில் எபபடியிருக்க வேண்டும். என்று கூறச் சொல்கின்றீர்களா? அதையும் அந்தப் பெரியவரே சொல்கிறார். காலததைக் கழிக்கும் வழி என்ன வென்று கேட்டால் கடமையைக் கருத்துடன் செய்வதுதான் வழி என்கிறார். அவர். அதற்கு என்ன வழி? எல்லாதுன்பங்களுக்கு அடிப்படையாக இருக்கும் ஆசையைக் குறைக்க வேண்டும் ! அதுதான் வழி.

ஒரு ரயிலில் பிரயாணம் செய்யப்போகிறோம். நாம் கொண்டு செல்லும் சுமை குறைவாக இருந்தால் பிரயாணம் சுகமாக இருககும். அதுபோல் ஆசைகள் எனும் சுமையைக் குறைத்துக் கொண்டால் வாழ்க்கை எனும் பிரயாணம் சுகமாக இருககும். சுமை அதிகமாக இருந் தால் அதற்கு உபரியான கட்டணமும் செலுத்த வேண்டி வரும். அதுபோல் ஆசைகள் அதிகமானால அதனால் விளையக் கூடிய அவதிகளையும் அனுபவிக்க வேண்டிவரும். கையில் ஒரு சிறுபையுடன் புறப்படுங்கள் கவலையில்லாமல் பயணிக்கலாம். இது தான இந்தப் புதுவருடத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.

ஒருத்தர் என்னைத் தேடி வந்தார் "சார் இந்த புது வருடத்தில் எனக்கு ஏதாவது நல்ல கருத்துச் செல்லுங்கள் சார் எனறார் நான் உடனே அவரை உட்கார வைத்து உபதேசித்தேன்" சார் நமது மனம் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. இதயம் என்ற பூட்டை மனம் என்ற சாவியால் திறிக்க வேண்டும் எப்படி திறக்கிறோம் என்பது தான் முக்கியம் ஒரு கதவைத் திறக்க வேண்டுமென்றால் கூட சாவியை வலது புறம் திருப்பினால பூட்டு திறக்கும் இடது புறம் திருப்பினால் பூட்டும், பூட்டும் சாவியும் ஒன்றுதான் சாவியை எந்தத் திசையில் திருப்புகிறோம். என்பது தான் முக்கியம். அதைக் கவனித்து நடந்து கொண்டாள் போதும். என்று சொன்னேன் அவரும் அமைதியாகக் கேட்டார்.

அதன் பின் அவரைக் கேட்டேன் "ஏன் சார் நீங்கள் இனி மேல எந்தப்பக்கம் சாவியைத் திருப்பப்போகிறீர்கள்? என்று கேடடேன். அவர் மெதுவாக நிமிர்ந்து பார்த்து "நான் பூட்டைத திறப்பதற்கு எப்போதும் சாவியை உபயோகப்படுத்துவதில்லை சார். சிறிய கம்பி போதும் என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# கருணா அணி -புலிகளிடையிலான மோதல் முடிவுக்கு வரவேண்டும்

## இந்திய முன்னாள் அமைச்சர் சிதம்பரம் கோரிக்கை

(சென்னை)

கருணாவின் அணியினருக்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமஇடையே இடம்பெற்றுவரும்மோதல்களை உடனடியாகக்கைவிட வேண்டும் என இந்தியாவின் முன்னாள் அமைச்சர் ஆர்.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தொிவித்த முன்னாள அமைச்சர் சிதம்பரம் மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகளுக்கும் கருணா அணியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்ட தினம் எனது வாழ் நாளில் இருள் சூழ்ந்த தினமாகும்.

தமிழின விடுதலைப் போர் மிக முக்கியமான கால கட்டத்தில் இருந்து கொண்டிருக்கும் இவ் வேளை யில் இத்தகைய ஓர் சூழ்நிலை இலங்கையில் உருவாகியிருப்பது மிகவும் வேதனை தருகிறது. இலங்கையில சமாதான முயற்சிகள் துளிர் விடுகின்ற வேளையில், இத்தகைய சம்பவங்கள் தவிர்க்கபபட வேண்டும். இவை தமிழமக்களினது எதிர் காலத்தை பாதிக்கக் கூடியன என்றே நான் கருதுகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துளளார்.

இதேவேளை, கலைஞர் கருணாநிதியும் இந்த நிலை பற்றி தனது ஆழ்தத கவலையை வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

# எதிர்த்தவர்கள் கேட்கின்றனர் இன்று அரசமைக்க உதவும்படி

## எல்லாவல மெதானந்ததேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

கருணை, அன்பு என்பவற்றை உள்ளடக்கி புத்த மதத்தின்படி முழு உலகிற்கும் முனனோடியாக இலங்கையில் தர்ம இராச்சியம் ஒன்றை தாம் ஸ்தாபிப்போம் என ஜாதிக ஹெல உறுமய கடந்த சனியன்று காலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீமகா போதியால் வைத்து உறுதியளித்துள்ளது.

அங்கு வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள விசேட அறிக்கையில் வண.எல்லாவெல மெதானந்த தேரர் கூறியதாவது,

கூட்டணி அரசுக்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி தம்மிடம் கேட்டிருந்தார்.

ஆனால் நாம் எந்த அரசினதும் வாலைப்பிடிக்க தயாரில்லை என அவருக்கு விளங்கியுள்ளோம். சிறுபான்மை அரசமைக்கும் படி அவரைக்கேட்டுக்கொண்டோம். அத்துடன் நாட்டை தவறாக வழி நடத்தும் கட்சிகளின் ஆதரவைப் பெறவேணடாம் என்றும் அலோசனை கூறியிருந்தோம். நல்ல செயல்களை செய்யவேண்டும் என்பது நமது நோக்கம்.

சிறுபான்மை அரசமைத்ததில் எமக்கு சந்தோஷ மே. ஏனெனில் தாம் பதவியில் இருக்கவேண்டியதற்காக அவர்கள் நல்லதையே செய்வார்கள். தர்ம இராச்சியம் உருவாவதற்கு பௌத்த பிக்குகளும, பிக்குனிகளும் எமக்கு உதவியுள்ளார்கள். சமாதானத்தை உருவாககி மக்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது எமது விருப்பம். நாம் பாராளுமன்றம் செல்வதால் இவை நிறுத்தப்படமாட்டாது.

பௌத்த பிக்குகள் இனவாதிகள் என்ற சர்வதேச அபிப்பிராயத்தை மாற்றவே தமது தேசியப்பட்டியலில் ஆனநதசங்கரியை நியமிக்க விரும்பினார்கள் என்ற கருததில் உண்மை இல்லை. தேர்தல் முடிவுகள் வெளியானதும் மக்களில் பெருமளவானோர்எமக்கு ஆசி வழங்கியுள்ளனர். எம்மை எதிர்த்தவர்கள இன்று அரசமைக்க உதவுமாறு கேட்கின்றார்கள். இதிலிருந்து அவர்கள் பதவிக்காகவே எம்மை எதிர்த்தாகள் எனத் தெரிகிறது. அரசமைக்க உதவ நாம் தயாரிலலை என்பதை அவர்களுக்கு மீண்டும் கூற விரும்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (தி-6)

## இராசி பலன்

**14.04.2004**

**(சித்திரை 2, புதன்கிழமை)**
**தசமி முன்னிரவு 8.24 வரை**
**திருவோணம் காலை 6.55 வரை**
**இராகுகாலம் 12.04-1.34 வரை**
**சுபநேரம் 4.35-6.05 வரை**

**மேடம்**
நன்கொடை, எடுத்த காரியம்கைகூடும், மனமகிழ்ச்சி, பெரியோரால் மதிக்கப்படுதல்.

**இடபம்**
சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, புதிய சிந்தை.

**மிதுனம்**
முழங்கால் வலி, பொருள் விரயம், கலகம், காரிய தடங்கல்.

**கடகம்**
தேக சௌக்கியம், பெருமையடைதல், புத்தி சாதுரியம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, சத்துருஜெயம், காரிய சித்தி, தனலாபம்.

**கன்னி**
காரிய இடையூறு, பணத்தட்டுப்பாடு, குடும்பக் கவலை, பிராயாணம்.

**துலாம்**
தன்மைக்கைக்குறைவு, மாதா சுகம், திடீர் நன்மை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
மனோ தைரியம், நற்கீர்த்தி, போசன சுகம், மாதர் நட்பு.

**தனுசு**
அதிக செ[illegible]வு, கௌரவக்குறைவு, போசன சுகக்குறை[illegible] முயற்சி தாமதம்.

**மகரம்**
வெகுமானம், சயன[illegible]ம், நல்ல முயற்சி, விருந்துபசாரம்.

**கும்பம்**
சோம்பல் நிலை, தனவிரயம், காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு.

**மீனம்**
ஆனந்தம், தனதானிய சேர்க்கை, உறவினர் வருகை, காரிய சித்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## இடம் பெயர்ந்த மக்களை கவனிக்க குழு அமைப்பு

(கொழும்பு)

தற்போது விடுதலைப் புலிகள் கிழக்கில் மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் இடம் பெயர்ந்த மக்களின் அவசரத்தேவைகளை கவனித்துக் கொளவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குழு ஒன்றை அமைத்துள்ளார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பாலபட்டபெண்டி தலைமையிலான குழுவினர் ஏற்கனவே திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இது குறித்து ஆராய்வதறகாகச் சென்றுவிட்டனர் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இக்குழுவில் லெப்கேணல் லயனல் பலகல்ல, மனிதப் பேரழிவு முகாமைத்துவ நிறைவேற்று பணிப்பாளர் சரத்சந்திரசிறி விதானகே, நலன்புரி அமைச்சின் செயலாளர் ஆகியோர் அடங்குவர்.

இக்குழுவினரின் கிழக்கு விஜயத்தின்போது, அவர்கள் வடகிழக்கு ஆளுனர் மேஜர்ஜெனரல் அசோகா ஜயவர்த்தன தலைமையில் மாகாண ஒன்றிணைப்புக் குழு ஒன்றையும் நியமித்துள்ளனர். இவ் ஒன்றிணைப்புக் குழுவில் இராணுவ உயரதிகாரிகள் யு.என.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் மாகாண சுகாதார, கல்வி அமைச்சுச் செயலாளர்கள் அங்கம் வகிககின்றனர். இவர் கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, தங்குமிட வசதிகளை வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இதற்கு போதுமான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். (தி-6)

## சிறைச்சாலை உத்தியோகத்தர் அரசியல் கைதிகளைத் தாக்கினர்

(கொழும்பு)

நர்கொழும்பில் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட 4பேரை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தாக்கியுள்ளனர்.

இபபிரதேச சபை உறுப்பினர் உட்பட 4பேர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஏன் தாக்கினர்? என்பது பற்றிய விபரங்கள் இன்னமும் சிறைச்சாலை ஆணையாளரினால் வெளியிடப்படவில்லை.

இத்தாக்குதல் சம்பவம்தொடர்பான விசார ணைகள் நீர்கொழும்பு சிறைச்சாலை அத்தியட்சகர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.(தி-63)

# கருணா காட்டிய பூச்சாண்டி

**தன்னை ஓர் இராணுவ உத்தியாளராகப் பிரகடனப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எதிராளிகளுக்கு தான் அவசியமான வேண்டு பொருள் என்ற மாயையை தோற்றுவித்தா கருணா.**

மட்டக்களப்பு, அம்பாறையை மட்டுமல்ல -தமிழீழத்தை -ஏன் தமிழர் வாழும் முழு உலகத்தையுமே - அச்சத்திலும் ஆதங்கத்திலும் ஆழ்த்தி அலைக்கழித்த ஒரு மன உளைச்சல் இன்று எம்மைவிட்டு அகன்று விட்டது. இருட்டு விலகி வெளிச்சம் வந்துவிட்டது போன்ற ஓர் உணர்வு. கருணாவின முகத்திரை பகிரங்கமாகவே கிழிந்து போயுள்ள இத்தருணத்தில் கருணா குறித்து எஞ்சியிருக்கும் சில மாயைகளும் அகற்றப்படவேண்டும். இதற்கான சில தடயங்களை ஒலிக்கீற்றுகளாக கருணாவின் கடந்த காலத்தில் இருந்து மீட்டுவருகிறது இக் கட்டுரை.

தன் மீதான நியாயமான குற்றச்சாட்டுகளை ஒரு தளபதிக் கே உரிய நேர்மையுடனும் தீரத்துடனும் முகம்கொடுக்கத் திராணியற்ற நிலையில் உணர்ச்சிவசப்பட்டு, ஆத்திரமுற்று மேலும் மேலும் அடுக்கடுக்காகத் துரோகமிழைத்த கருணா இன்று தமிழீழத் தேசியத்தின் சக்திக்கு முகம் கொடுக்கமுடியாமல் தொப்பி கலை முகாமை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த சில காலமாக எதிர்ப் போராட்ட சக்திகள் ஏற்கனவே போட்டுவைத்திருந்த கொழு கொம்புகளைப் பற்றிக் கொண்டது மட்டுமல்ல தனது கற்பனை போன போககில் எல்லாம் எதிர்ச்சக்திகளுக்குத் தீனிபோடும் முயற்சியிலும் கருணா இறங்கினார். அரசியல் அறிவோ, விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஆழமான பார்வையோ இல்லாதவர்கள் கூட அப்பட்டமாக விளங்கிக்கொள்ளக் கூடியவாறான சில பொய்களையெலலாம் கருணா இயற்றலானார். ஏன்? கூலிப்படையினர் கூட ஏளனம் செய்யுமளவுக்குத் தமிழர் தாயகத்தைத் துண்டாடும் முயற்சிகளுக்கு முண்டுகொடுக்கலானார். ஆனால், அவரது முயற்சிகள் எடுபடவில்லை. தேசியத்தின் முன் அடிபட்டுப் போய்விட்டன.

ஏதோ இருபது வருடங்களாகத் தலைவரை நன்றாக அறிந்தவர் என்றும் அதனால் தலைவரின் சிந்தனையைத் தான் நன்கு அறிவேன் என்றும் பிரகடனப்படுத்துவதன் மூலம் தன்னைத் தானே எதிர்ச்சக்திகளுக்கு அவசியம் தேவையான ஒரு வேண்டு பொருளாக விளம்பரப்படுத்தினார். தற்காப்பு யுத்தம் என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்தியது தனது வேலை என்பது போன்ற பாணியிலான கட்டுக்கதைகளை தொப்பி கலையில் இருந்து ஓடுவதற்குச் சிலநாட்களுக்கு முன்னர் பந்துல ஜெயசேகரா என்ற சிங்களப் பேரினவாத ஊடகவியலாளருக்குத் தெரிவித்திருந்தார். இந்த மாயை பற்றிய சில உண்மைகளை நாம் தரிசிக்கவேண்டிய தேவையுள்ளது.

ஒரு போர் பல சமர்களைக் கொண்டது ஒரு சமர் பல சண்டைகளைக்கொண்டது. ஒரு சமரின் அங்கங்களான தனித்தனியான சண்டைகளைத் தலைமை தாங்கி மூர்க்கமான முறையில் சண்டையிட்டு கொடுக்கப்பட்ட இலக்குகளைச் சென்றடையும் திறமை கைவரப்பெற்ற ஒரு கட்டளைத் தளபதியாக இயங்கும் திறன் கருணாவுக்கு இருந்தது. அது மட்டுமன்றி போரியலை நவீனமயப்படுத்துவது தொடர்பான ஆர்வமுடைய ஏனைய தளபதிகளைப் போலவே கருணாவுக்கும் இருந்தது. ஏனைய தளபதிகளை விடவும் சில சிறப்பான சலுகைகள் கருணாவுக்குச்



சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கிட்டியிருந்தன. பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டமையால் அளவுக்கு அதிகமாக ஊடகப் பிரசித்தி பெற்ற தளபதியாக கருணா உருவெடுத்திருந்தார்.

கருணாவின் வாழ்வை துரோகத திற்குமுன், துரோகத்திற்குப் பின் என்ற இரண்டு கட்டங்களில் வைத்து ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

துரோகத்துக்கு முன் தான் பெற்றிருந்த பிரசித்தியைத் துரோகத்துக்குப் பின் கருணா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். துரோகத்துக்குப் பின்னான சமீபத்தைய நாட்களில் தன் இராணுவத் திறமைகள் பற்றிய சில மிகைப்படுத்தப்பட்ட தகவல்களை கருணா திட்டமிட்ட வகையில் ஆங்கில ஊடகங்களுக்கு வெளியிட்டுவந்துள்ளார்.

இராணுத்தந்திரோபாய உத்திகளை வகுத்து, திட்டங்களைத் தீட்டி, வியூகங்களைத் தீர்மானித்துச் சமர்களுக்குத் தலைமை தாங்கும் வல்லமை கைவரப் பெற்ற ஒருவரையே இராணுவ உத்தியாளர் என்ற வரைவிலக்கணத்துக்கு உட்படுத்தலாம். ஒரு சமரின சண்டைகள் எவையெவை? அவற்றை எங்கெங்கு நிகழ்த்துவது? எவ்வாறு நிகழ்த்துவது? எப்போது நிகழ்த்துவது? எவ்வளவு விரைவாக நடாத்துவது போன்றவற்றைத் தீர்மானிக்கின்ற போர்த்தந்திரோபாய உத்திகளை வகுக்கும் திறமை பெற்ற ஒருவரே இராணுவ உத்தியாளர். இவ்வாறான ஒரு இராணுவ உத்தியாளராகத் தன்னைத் தானே விளம்பரப்படுத்த முயற்சித்தார். துரோகத்துக்கு முன், தனது வாயாலேயே தான் ஒரு உத்தியாளனா அல்லது ஒரு கட்டளைத் தளபதியா என்பதற்கான பதிலைக் கருணா மிகவும் அழுத்தம் திருத்தமாகவும் தெளிவாகவும் பலமுறை கூட்டங்களில் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் நாம் பதிவுசெய்துவைத்திருக்கவில்லை.

துரோகத்தின் பின், கருணா

**இளந்தென்றல்**

தன்னைப் பற்றித் தானே மிகைப் படுத்தப்பட்ட தகவல்களை வெளியிட்டுவந்தற்கு எதிர்மாறான ஆதாரங்களை துரோகத்துக்குப் பல மாதங்களுக்கு முன்னர் அவர் பேசிய பேச்சுக்களின் பகுதிகள் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. பெருந்திறமைவாய்ந்த தலைவரும், அர்ப்பணிப்புகள் நிறைந்த, தீரம் கொண்ட போராளிகளும் அணித்தலைவர்களும் இருந்த சூழலில் ஒரு திறமை வாய்ந்த கட்டளைத் தளபதியாக செயற்பட்டிருக்கும் வல்லமை கருணாவுக்கு இருந்ததென்பது உண்மைதான். ஆனால் துரோகத்தின் பின், இலட்சியத்தைக் கைவிட்டு, கூலிப்படையாகி, உதிரியாகி நின்று, உளநிலை உறுத்தல்களுடன், உறுதியற்ற ஒரு எதிரிப்படையில் கருணாவால் எதையுமே சாதித்து விடமுடியாது. எனவே கருணா என்ற முரளிதரன் துரோகத்தின் பின் ஒரு அற்ப பதராகி விட்டார். இனியும் அவர் குறித்த மிகைப் படுத்தப்பட்ட அச்சங்கள் எமக்குத் தேவையில்லை!

# ஐக்கிய தேசிய கட்சியின் செயலுக்கு மல்வத்தை பீடாதிபதி கண்டனம்

(கொழும்பு)

ஐக்கியதேசிய கட்சியின் தேசியப் பட்டியலில் திலக் மாரப்பனவின் பெயர் குறிப்பிடப்படவில்லை இது வெறும் துரோகத்தனமான செயல் என மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதி வணக்கத்திற்குரிய றம்புக்கல ஸ்ரீ விபசி தேரர் கண்டித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரை ஐ.தே.க.தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்படாமை குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சிறுபான்மை இனங்களின அரசியல் வாதிகளின் அழுத்தங்களுக்கு ஐக்கியதேசியக் கட்சி இடமளித்துள்ளது. அதனால் அவர் புறந்தள்ளப்பட்டுள்ளார்.

இவர் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இடம்பெறுவேன் என தனது மனதில் நட்பாசையை வளர்த்து வந்துள்ளார். ஆனால் அப்பட்டியலில் அவரின் பெயர் இடம்பெறாமை குறித்து பாரிய மனக்கவலை அடைந்துள்ளார்.

இவ்வாறான கட்சியின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் அக்கட்சி மேலும் பின்னடைவுகளை எதிர் நோக்க வேண்டிவரும்.

இவ் விடயத்தில் திலக் மாரப்பன மட்டுமன்றி மேலும் இரு முன்னாள அமைச்சர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரே அவர்களாவர்.

இக்கட்சி தனது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக தனது 4தொகுதிகளை மட்டுமே பயன்படுத்தி இருக்கிறது. ஏனைய 7 உறுப்பினர்களும் ஸ்ரீ.மு. க., தொ.கா.மற்றும் ம.ம.முன்னணி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள ளது என அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

(தி-63,6)

# பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத் தடை

**அமைச்சு நடவடிக்கை**

(கொழும்)

பொலித்தீன் வகைகளின் உற்பத்தியை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக மாற்றுத் தயாரிப்புகளை மேற் கொள்வது குறித்து ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அன்றாடம் பொலித்தீன் பாவனை அதிகரித்து வருவதால், சூழல் மாசடைகிறது. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அது பூரண அளிவில் சாத்தியப்படவில்லை.

இதனால் இந்நடவடிக்கையினை மேலும் துரிதப்படுத்தி, அதனைக் கடடுப்படுத்த மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

(தி-63)

# சமுர்த்தி அதிகார சபையின் கருத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு

(பொன்னாலை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபை யாழ்.மாவட்டத்திற்கென மிருக வளர்ப்பு மீன்பிடி கருத்திட்டத்தின் கீழ் 4இலட்சத்து 95ஆயிரத்து 600ரூபா ஒதுக்கியுள்ளது.

சமுர்த்தி அதிகாரசபை, யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளருக்கு இது தொடர்பாக அறிவித்திருப்பதாக தெரியவருகின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களின் கோரிக்கைகளுக்கேற்பவே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், யாழ்ப்பாணம 75ஆயிரம், ஊர்காவற்றுறை 37ஆயிரத்து 500, சாவகச்சேரி-6 ஆயிரம், வேலணை-4ஆயிரத்து 800, தெல்லிப்பளை-62ஆயிரத்து 500, காரைநகர்-12ஆயிரம், சண்டிலிப்பாய் ஒரு இலட்சத்து 7ஆயிரத்து 500, சங்கானை-ஒரு இலட்சத்து 7ஆயிரத்து 500, நல்லூர்-ஒரு இலடசத்து 25ஆயிரம் என்ற அடிப்யில் இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-49)

# அரசை கொண்டுசெலுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

**பிரதமர் வலியுறுத்து**

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியில் சிறுபான்மை



இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய விசேட உரையின் போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டு மக்களின் நலனுக்காக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் பங்கேற்று ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அப்போதுதான் இன, மத பேதமற்ற வகையில் நாட்டை நிர்வகித்துச்செல்லமுடியும். இதனையே நாட்டு மக்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும். அதேபோல் ஏனைய கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குமாயின், நாட்டின் இனப்பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வுகாணப்படும் என்றார்.

(சி-63)

# ஜே.வி.பி. — ஐ.ம.சு.மு. இடையில் முரண்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை

**ஜனதாஸ பீரிஸ் சுட்டிக்காட்டு**

(கொழும்பு)

ஜே.வி.பிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகள் எதுவுமில்லை, ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் ஓரிரு தினங்களில் அமைச்சர்களாகப் பதவியேற்பர் என ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதவியேற்ற தினத்தன்று ஜே.வி.பியின் ஏப்ரல் கார்த்திகைத்தன வைபவம் இடம்பெற்றதனாலேயே ஜே.வி.பி.எம்பிக்கள் அன்றைய நிகழ்வில் கலந்துகொளளவில்லை. அவர்கள் வெகு விரைவில் தமக்குரிய அமைச்சுப் பொறுப்புக்களை இன்னும் ஓரிரு நாட்களில் ஏற்பார்கள்.

இதேவேளை, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், மக்கள் விடுதலை முன்னணியின் சில கோரிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிறைவேற்றத் தவறியுள்ளது. அதனால் அதுகுறித்து தமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விரைவில் கூடி ஆராயவுள்ளோம். அதன் பின்னரே அமைசசுக்களை பொறுப்பேற்பதா? இல்லையா? என்ற முடிவை எங்களால் எடுக்கமுடியும் என்றார்.

இதேவேளை, ஜே.வி.பியின் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதாக அது குறித்து தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின நகர அபிவிருத்தி அமைசசர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

(தி-10)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டு க.பொ.த.உ/த பரீட்சையில் கிறிஸ்தவ பாடத்திற்கு தோற்றவுள்ள பரீச்சார்த்திகளுக்கான கிறிஸ்தவ பாடமீட்டல் கருத்தரங்கு ஒன்று இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில் அகவொளி குடும்ப வளத்துணை நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 16ஆம் 17ஆம் திகதிகளில் காலை 8மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

(தி-04)

# சாப்பாட்டில் ருசி பார்த்தால் சத்து காணாமல் போய்விடுமா?

மனித இனத்தின் முதல் எதிரி நாக்குத்தான். நாம் நாவின்ருசிக்கு அடிமையாகி உடல் நலனில் அக்கறைகாட்டுவதில்லை. 1 1/2 அங்குல நாக்கு நம்மை எவ்வாறு ஆட்டிப்படைக்கிறது பாருங்கள்.



வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டால் மனமும், வயிறும் நிரம்பிவிடும். ஆனால் உடலுக்குத் தேவையான எல்லாச்சத்துக்களும் நமக்குக்கிடைக்கிறதா என்று நாம் யோசிப்பதே இல்லை.

நம் முன்னோர்கள் மிகவும் புத்திசாலிகள். எல்லாச் சத்துக்களும் உரிய அளவில் கிடைக்கும் வகையில்தான் உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடித்தனர்.

ஆனால் காலப் போக்கில் மேல்நாட்டு நாகரிகத் தாக்கம், பொருளாதார, சமூக நிலையில் ஏற்பட்டுள்ள அதிவேக மாற்றங்கள் காரணமாக நமது உணவுப் பழக்க வழக்கத்திலும் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் நாம் என்ன சாப்பிடுகின்றோம். அதில் என்னென்ன சத்துக்கள் உள்ளன. உடலின் அன்றாட இயக்கத்துக்குத் தேவையான சத்துக்கள் நம் உணவில் இடம் பெற்றுள்ளதா என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. ஏதோ "வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம்" என்ற நிலையில் தான் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறோம்.

"கையில் வருகிறது வாயில் போகிறது. வயிறும் நிரம்புகின்றது. ஆனால் உடல் பட்டினிகிடக்கிறது. நம்மில் பெரும் பாலானோரது நிலை இதுதான். பிடித்ததை விரும்பி வயிறு நிறைய உண்கிறோம். உடலுக்குத் தேவையான சத்துக்கள் அதில் உள்ளனவா? அதனால் உடல் நலத்துக்கு நன்மை உண்டா? என்று யோசிப்பதேயில்லை. இதனால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் உரிய விகிதத்தில் கிடைப்பதில்லை.

வீதி படுமோசமாக இருக்கும் போது வாகனத்தைப் புதிதாக வாங்குவதால் பலனில்லை. அதுபோல் நோய் வரும் போது எவ்வளவு சிறப்பாகச் சிகிச்சை அளித்தாலும் சமச்சீரான உணவுண்டு உடல் நலத்தைப் பேணிக்காக்காவிட்டால் உரிய பலனின்றி மீண்டும் நோய்கள் வரும்.

## ஊட்டச்சத்தின் வகைகள்

உடல் தேவையின் அடிப்படையில் ஊட்டச் சத்துக்கள் இரு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை சிறிய ஊட்டச்சத்துக்கள், பெரிய ஊட்டச்சத்துக்கள் என்பனவாகும்.

காபோ ஹைதரேற் புரதம், கொழும்பு ஆகியவை பெரிய ஊட்டச்சத்துக்களாகும். இவை உடலுக்குப் பெரிய அளவில் தேவைப்படுகின்றது. உடல் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் இவை எரிசக்தியாக இருக்கின்றன.

விற்றமின் மற்றும் தாதுப் பொருட்கள் சிறிய ஊட்டச்சத்துக்கள் ஆகும். இவை உடலுக்குத் சிறிதளவே தேவை என்றாலும் உடல் இயக்கத்துக்கு மிகவும் அவசியமாகிறது.

## சத்துக்கள் அல்லாத பிற உணவுகள்

நமது உணவில் ஊட்டச் சத்துக்கள் அல்லாத பிறபொருள்களை வாசனை ருசி, செரிமானத்துக்காகச் சேர்க்கிறோம், சீரகம், பூண்டு, வெந்தயம் போன்ற பொருட்கள் ஊட்டச் சத்துக்கள் ஆகாது.

ஆனால் இப் பொருட்களில் வாசனை மட்டுமன்றி சில மருத்துவக் குணங்களும் உள்ளன.

புரதச் சத்து அடங்கிய உணவுகள் உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றன. முக்கியமாக பருப்பு, பயறு வகைகள், பால், மீன், இறைச்சி போன்றவற்றில் புரதச் சத்து அதிகமாகவே உள்ளன.

## உடலுக்குச் சக்திதரும் உணவுகள்

மாச் சத்து மற்றும் கொழுப்புச் சத்து உள்ள உணவுகள் உடலுக குச் சக்தி அளித்து செயலாற்றச் செய்கின்றன.

அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகள், சர்க்கரை கிழங்கு வகைகள் ஆகியவற்றில் மாச்சத்து அதிகமாக உள்ளது. எண் ணெய், நெய் போன்றவற்றில் கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளது.

விற்றமின்கள், தாதுப் பொருள் அடங்கிய உணவுகள் உடலைப் பாதுகாத்துப் பராமரிக்கின்றன. காய், கனிகள் மற்றும் பால் போன்றவற்றில் விற்றமின்களும் தாதுப் பொருட்களும் உள்ளன. இந்த உணவு வகைகள் உரிய விகிதத்தில் கலந்திருப்பதே சமச்சீரான உணவு. சத்துக்கள் சம விகிதத்தில் கிடைக்கும் வகையில் நமது அனறாட உணவு அமைய வேண்டும்.

## அன்றாடம் உணவில் உள்ள சத்துக்கள்

காலை எழுந்தவுடன் பால் குடிப்பது மிகவும் நல்லது. பொதுவாக உடல் வளர்ச்சிக்குப் புரதச் சத்து மிகவும் அவசியம். எனவே காலைச் சாப்பாட்டில் புரதச் சத்து அதிகமுள்ள பருப்பு வகைகளைச் சேர்க்க வேண்டும்.

பாண என்றால் வெறும் பாணை மட்டும் உண்ணாமல் காய்கறிகளைச் சேர்த்து (சான்ட்விச்) சாப்பிடவேண்டும்.

காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடைப்பட்ட நேரத்தில் மோர் அல்லது இளநீர் சாப்பிடலாம். காய்கறிகள் கலந்து சூப் அல்லது பழச்சாறு இவற்றில் எதாவது ஒன்றைக் குடிக்கலாம்.

மதிய உணவு ஊட்டச்சத்து நிறைந்ததாக இருப்பது நல்லது. சோறு, காய்கறிகள் கலந்த சாம்பார், பொரியல், தயிர் ஆகியவை சம விகித ஊட்டச்சத்தைக் கொடுக்கும்.

அப்பளம் சாப்பிடுவதால் நாவுக்கு வேண்டுமானால் சுவையாக இருக்கலாம். ஆனால் உடலுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை. மதிய உணவில் மேற்

**N.தீபா**

கூறியவற்றுடன் அப்பளத்தையும் சேர்த்துச் சாப்பிடலாம். ஆனால் கறிகாய்களுக்குப் பதிலாக அப்பளம் பொரித்துச் சாப்பிடுவார்கள். இது மிகத்தவறு. அத்துடன் கரட், வெள்ளரிக்காய், வெங்காயம் போன்றவற்றைப் பச்சையாக உண்ணலாம்.

தேநீர் நேரத்தில் தேநீருடன் ஏதாவது சுண்டல், கடலை போன்றவற்றை உண்ணலாம். முடிந்தால் ஏதாவது பழம் சாப்பிடுவதும் நல்லது. எண்ணெயில் தயாரித்த உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

இரவு உணவும் மதிய சாப்பாடு போல இருக்கலாம். எல்லாச் சத்துக்களும் அடங்கிய உணவை என்றோ ஒருநாள் மட்டும் சாப்பிட்டால் போதாது. தினமும் சம விகித ஊட்டச்சத்துக்கள் அடங்கிய உணவில் அக்கறை செலுத்த வேண்டும். அவரவர் வசதிக்கு ஏற்ப சத்துக்கள் நிறைந்த உணவைத் தெரிவு செய்து உண்ண வேண்டும். □

## தபாலகம் புதிய இடத்தில்

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகம், கடந்த 6 ஆம் திகதி முதல் புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த மேற்படி அலுவலகம் கடந்த செவ்வாய் முதல் பண்டத்தரிப்புச் சந்தைக்கு அண்மையிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இடம் மாற்றம் செய்யப்பட்ட தபால் அலுவலகத்தின் புதிய தபால அதிபராக கொழும்பு - கொட்டாஞ்சேனை தபால் அலுவலகத்தில் கடமையாற்றிய எம் நடராசா இம் மாதம் முதல் பதவி ஏற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-49)

## இறப்பர் உற்பத்தி வீழ்ச்சி

இலங்கையில் இறப்பர் உற்பத்தி பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக பெருந்தோட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் ஒரு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உள்ள இறப்பர் மரங்களில் இருந்து ஆயிரத்து 578 கிலோ இறப்பர் பெற்றுக் கொளளப்படும். அதேசமயம், இலங்கையில் ஒரு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 724கிலோ இறப்பரே உற்பத்தி செய்யப்படுகின்றது.

இலங்கையில் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சி அடைவதற்கு பழைய வழிமுறைகளை கையாளல், புனர் நடுகை மேற்கொள்ளப்படாமை, இறப்பர் தோட்டங்கள் தொடர்ந்தும் சேதமடைதல் ஆகியவனவே பிரதான காரணமாக இருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-60,10)

## தொழிலாளி குத்திக் கொலை

தெகிகொல்ல பிரதேசத்தின் தோட்டத் தொழிலாளி ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவடன் உடன் இருந்த சக தொழிலாளி ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.(தி-63)

# தனிப்பட்ட முறையில் வாஜ்பாயிக்கே ஆதரவு நடிகர் ரஜனிகாந் அறிவிப்பு


வரும் மக்களவைத் தேர்தலில் தனது ஆதரவு எவருக்கும் இல்லையென்ற போதிலும் தனிப்பட்ட முறையில் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத்தான் ஆதரவளிப்பதாக திரைப்பட நடிகர் ரஜனிகாந் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத் தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் மீண்டும் பதவியில் அமரப் போவது வாஜபாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தான் என்றும், இது உறுதி என்றும் தெரிவித்தார்.

நாட்டின் முக்கிய பிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் நதி நீர் இணைப்புத் திட்டம் தொடர்பாக மற்றவர்கள் உறுதியான முடிவுக்கு வராத இவ்வேளையில் தே.ஜ.கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் இத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என உறுதியிடத் தெரிவிக்கப்பட்டிருப்பதால் தான் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

மதுரையில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவநர் டாக்டர் ராமதாஸ் மீது வழக்குப் பதிவு செய்த காவல் துறையினருக்கும் தமிழ் நாட்டு அரசுக்கும் பாராட்டுத் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

பா.ம.க. போட்டியிடும் ஆறு மக்களவைத் தொகுதிகளில் அவர்களை எதிர்க்கும் அ.இ.அ.தி.மு.க.மற்றும் பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு வெளிப்படையான ஆதரவை அளிப்பதற்குத் தனது ரசிகர் மன்றங்களுக்கு ஒப்புதல் அளித்ததாக அவர் கூறினார். (து)



நதிகளை இணைக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவிற்கே தனது ஆதரவு என்று நடிகர் ரஜினிகாந் தெரிவித்துள்ளார். மேலும் பா.ம.க. போட்டியிடும் 6 தொகுதிகளிலும் ரசிகர்கள் அனைவரும் எதிரான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

## கலையின் பெயரால் சமுதாய சீரழிவு

## பா.ம.க. கொள்கைபற்றி ஜீ.கே.மணி

(சென்னை)

அரசியல் ரீதியான எந்தச் சவாலையும் சமாளிப்போம் என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி கூறியிருக்கிறார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், சிலர் பா.ம.க.வை எதிர்க்கப் வோவதாகக் கூறுவதை நாங்கள் அரசியல் ரீதியாகவே எதிர் கொள்வோம் என்று கூறியிருக்கிறார்.

எந்தவொரு தனிப்பிட்ட நபருக்கும் பா.ம.க. எதிரானது அல்ல; கலை என்ற பெயரில் சமுதாயத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் நச்சுக் கருத்துக்களைத் தான் தமது கட்சி எதிர்ப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (து)

## தேர்தல் அதிகாரியை மாற்ற அ.தி.மு.க. கோரிக்கை

புதுவை மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியை உடனடியாக மாற்றி வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரைத் தலைமைத் தேர்தல் அதிகாரியாக நியமிக்க வேண்டுமென அ.இ.அ.தி.மு.க. கோரியுள்ளது.

அக் கட்சியின் புதுவை மாநிலச் செயலாளர் ஏ.அன்பழகன் பாண்டிச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதைத் தெரிவித்தார். தற்பொழுதுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி மாநிலத்தில் ஆட்சியிலுள்ள காங்கிரஸ் மற்றும் கூட்டணிக கட்சிகளின் சொற்படி நடக்கிறார் என்றார்.தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் புதுவை வருகையை யொட்டி அலங்கார வளைவுகள் அமைத்ததனால் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி ஆதரவுடன் தம்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார். (து)



ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர்களுககான அழகிப் போட்டி தாய்லாந்து பட்டாய நகரில்நடைபெற்றது இதேபோன்று வரும் அக்டோபரில் உலக அழகிப் போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் 40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங் கேற்கின்றனர். அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற தாய்லாந்துப் பெண் சக்நரீத் மாலயபோன் நடுவில் மற்றும இரண்டாம், மூன்றாம் இடம் பிடித்த அழகிகள்.

## வாக்களிப்பது அவரது தனிப்பட்ட உரிமை

## ரஜனி பற்றி கருணாநிதி

பா.ம.க.போட்டியிடும் தொகுதிகளில் பா.ஜ.க - அ.இ.அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு அளிக்கப்படுமென்று நடிகர் ரஜனிகாந் கூறியிருப்பது எதிர்பார்த்த ஒன்றுதான் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தர்மபுரியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஜனியின் இந்த முடிவால் தமது கூட்டணியின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.


தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முக்கிய நதிகள் அனைத்தையும் இணைக்க தே.ஜ.கூ. மட்டுமே உறுதியளித்திருப்பதால் பா.ஜ.கவுக்கு வாக்களிப் போவதாக ரஜனிகாந் கூறியிருப்பது பற்றிக் கேட்ட போது அவர் யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போட அவருக்கு உரிமை உண்டு என்றார்.

ஆனால் அவர் இந்த முடிவை எடுப்பதற்குக் கூறியுள்ள காரணத்தை ஏற்க முடியாது என்று கருணாநிதி குறிப்பிட்டார். (து)

## இந்தியச் செய்திகள்

# பாகிஸ்தான் எ.க. தலைவருக்கு 23 வருட சிறைத்தண்டனை

(இஸ்லாமாபாத்)
அரசுக்கு எதிராக மக்களை துாண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒக்டோபர் மாதம கைது செய்யப்பட்ட 15 அரசியல்கட்சிகளால் உருவாக்கப்பட்ட கூட்டு முன்னணியின் தலைவர் ஜாவிட் ஹஸ்மி இரகசிய விசாரணைகளின் பின் 23 வருடம் சிறைத் தண்டனை விதிககப்பட்டார்.



பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகவும் விளங்கும் இவர் பாகிஸ்தான ஜனாதிபதிக்கெதிராக கடுமையான விமர்சனங்களைச் செய்து வருகிறார். முஷாரப் பதவியிலிருந்து விலகி பாகிஸ்தானில் ஜனநாயகத்திற்கு வழி விட வேண்டும் என்று வெளிப்படையாக கோரும் இவர் இன்று தொடக்கம் நாடு தழுவிய ஆர்பபாட்டங்களை நடாததத் திட்டமிட்டிருந்தார்.

1997ல் இரத்தம் சிந்தாத புரட்சியின் மூலம் பாகிஸ்தான் நாவாஸ் ஷெரீப்பைப் பதவி கவிழ்த்த முஷாரப் பதவி விலக வேண்டும். என்று இராணுவம் அரசியலில் தலையிடுவது தவறு என்றும் பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்தே துண்டுப் பிரசுரங்களை இவர் வெளியிட்ட போது கைது செய்யப்பட்டார். , (யே)



ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர்களுக்கான அழகிப் போட்டி தாய்லாந்து பட்டாயா நகரில் நடைபெற்றது. இதேபோன்று வரும் அக்டோபரில் உலக அழகிப் போட்டியும் நடைபெற உள்ளது. இதில் 40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற் கின்றனர். அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற தாய்லாந்து பெண் சக்நரீத்மால்யபோன் (நடுவில்), மற்றும் இரண்டாம், மூன் றாம் இடம் பிடிதத அழகிகளை படத்தில் காணலாம்.

## ஹெலிக்கொப்டர் சுடப்பட்டது

(ஃபலூஜா)
ஈராக்கில் பாக்தாதுக்கு மேற்கில் ஃபலூஜா நகரில் அமெரிக்க ராணுவ ஹெலிகொப்டர் கடந்த ஞாயிறறுக்கிழமை சுட்டு வீழ்த்தப்பட்டது. அதிலிருந்த 2 விமானிகளும் உயிரிழந்தனர்.

சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிகொப்டரின் பாகங்கள் விழுந்ததில் 2 அமெரிக்க வீரர்கள் காயமடைந்தனர்.

இத்தகவலை பிரிகேடியர் ஜெனரல் மார்க் ஸ்மித் நிருபர்களிடம் தெரிவித்தார். (யே)

## அமெரிக்க உப ஜனாதிபதி ஜப்பானுக்கு விஜயம்

(டோக்கியோ)
ஆசிய நாடுகளுக்கான விஜயம் மொன்றை மேற்கொண்டிருக்கும் அமெரிக்க உப ஜனாதிபதி சென்னி நேற்று ஜப்பான போய்ச் சேர்ந்தார்.

நேற்றுப் பிரதமரைச் சந்திப்பதற்கு முன்பாக ஜப்பானின் அமெரிக்கத் தூதரகத்திலுள்ள 200 விஷேட கொமாண்டோக்களை அவர் சந்தித்தார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பாடு வெளிநாடு ஒன் றின் யுத்த விவகாரங்களுக்கு ஜப்பான் படைகளை அனுப்பியது ஈராக்விவகாரத்தில்தான். இதனால் அந்நாட்டுமக்கள் இவ் விவகாரம் தொடர்பில் பிளவுபட்டு நிற்கின்றனர்.

ஜோர்ச் புஷ்ஷின்நெருங்கிய சகாவும் உலகப் பயங்கரத்திற்கெதிராக பாரிய ஒத்துழைப்பு வழங்கிவருபவருமான ஜப்பானியப் பிரதமர் கொய்சூமிக்கு அமெரிக்காவின் அன்பையும் நன்றியையும் தெரிவிப்பதோடு ஜப்பானியரின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தவுமேதான் ஜப்பான வந்துள்ளதாகவும் சென்னி தெரிவித்தார். (யே)

## சாறி வாங்கப் போனோர் சாவை வாங்கிய பரிதாபம்

### 21 பெண்கள் பரிதாப மரணம்

(டெல்லி)
சாறிவாங்கப் போன பெண்கள் சாவை அணைத்த பரிதாபம் இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்னோ நகரில் இடம்பெற்றது.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினரும் முதிர்ந்த அரசியல்வாதியுமான லால்ஜி தண்டன் தனது பிறந்தநாளை முன்னிட்டுப் பெண்களுக்குச் சாறிகளை அன்பளிப்பாக வழங்கினார்.

தேர்தல் காலத்தில் சாதாரண மக்களின் வாக்குகளைக் கவர்ந்தெடுக்க இந்திய அரசியல்வாதிகள் அன்பளிப்புக்கள் வழங்குவது வழக்கம்.

சாறிகள் வழங்கப்படுவதைக் கேள்விப்பட்டு 5,000த்திற்கும் அதிகமான பெணகள நெருக்கியடித்த போது ஏராளமான சாறிகள் கொடுபடுவதற்கு மீதமிருந்த நிலையிலும் எல்லாம் முடிந்து விட்டதாகக் கூட்டத்தில் கிளப்பப்பட்ட வதந்தியைத் தொடர்ந்து சன நெருசல் ஏற்பட்டது.

பலரும் சாறிகளைப் பெற்றுக் கொள்ள முண்டியடித்ததால் சுமார் 21 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந் தனர். இவர்களில் 40-60 வயதான 8 பெண்களும் 7 இளம் பெண்களும் அடங்குவர்.(யே)

## பணயக் கைதிகள் விடுதலை

(பக்தாத்)
ஈராக்கில் தீவிரவாதிகளால் பிடித்துச் செல்லப்பட்ட இந்தியர் உள்ளிட்ட 9 பிணைக்கைதிகள் திங்கட்கிழமைவிடுவிக்கப்பட்டனர். இவர்களை விடுவிக்குமாறு தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்த இஸ்லாமிய மதகுருக்கள் கமிட்டி இத் தகவலைத் தெரிவித்தது.

பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட துருக்கி நாட்டைச் சேர்ந்த மூவர், மூன்று பாகிஸ்தானியர், ஒரு நேபாளி, பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒருவர் ஆகியோரையும் தீவிரவாதிகள் விடுவித்துள்ளனர்.

ஆனால் அவர்களால் பிடித்துச் செல்லப்பட்ட 3 ஜப்பானியரின் கதி என்ன என்பது தெரியவில்லை என்று இஸ்லாமிய மதகுருக்கள் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் முத்தன்ன ஹரித் கூறினார். (யே)




மூன்று ஜப்பானியர்கள் ஈராக்கில் பணயக் கைதிகளாகச் சிறைப்பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜப்பானியப் பிரதமர் கொயிசிமோவுக்கெதிரான மனோநிலை ஜப்பானியர்களிடம் அதிகரித்து வருகிறது. நேற்று அமெரிக்க உப ஜனாதிபதி சென்னி ஜப்பானுக்க விஜயம் செய்தபொழுது ஈராக் விவகாரத்தில் ஜப்பான் எடுத்திருக்கின்ற நிலைப்பாட்டுக்கு எதிராக ஜப்பானியர்கள் கோஷம் எழுப்பினர். ஜப்பானிய பிரதமரின் படங்களுக்குக் கீழே தேடப்படும் நபர் எனும் வாசகங்களைப் பொறித்து அப் பதாதைகளை ஊர்வலங்களின் முன்னிலையில் எடுத்துச்சென்றார். ஜப்பானியர்களை அமைதிப்படுத்தும் முயற்சியில் அமெரிக்க உப ஜனாதிபதி முனைந்திருக்கிறார்.



கிறிஸ்தவர்களின் பண்டிகையான ஈஸ்டர் உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட்து. ரோமில் உள்ள ஒரு தேவாலயத்தில் ஈஸ்டர் பிரார்த்தனையில் தனது தந்தையின் தோளில் அமர்ந்து மெழுகுவர்த்தியை ஏந்தியிருக்கும் சிறுமி ஒருத்தியின் பயபக்தியான தோற்றத்தைப் படத்தில் காண்கிறீர்கள்.

# சீனக் கைதிகள் விடுவிப்பு

# 12 ரஷ்யர்கள் பிடிக்கப்பட்டனர்

## மதகுருமாரும் புத்திஜீவிகளும் எதிர்ப்பு

(பக்தாத்)
ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட சீனப் பிரஜைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பள்ளிவாசல் ஒனறில் வைத்து இஸ்லாமிய மதத்தலைவர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

பொதுமக்களைக் கடத்திச் செல்லும் சம்பவங்களுக்கு ஈரானிய மதகுருமாரும் புத்திஜீவிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து "ஃபற்றா" எனப்படும் மத அறிக்கையை வெளியிட்டனர்.

இவ்வாறன ஆட்கடத்தல்கள் இஸ்லாக்கிற்கு விரோதமானவை என்றும் இது ஈராக்கியர்களுக்கு அவமானத்தைத் தரும் செயல் என்றும் அறிவிக்கப்பட்டது.



இதணைத் தொடர்நது 7 சீனர்களும் விடுவிக்கப்பட்ட போதும் மூன்று ஜப்பானியர்களின் கதி என்னவென்று இது வரை தெரியவில்லை.

இதேவேளை கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த 11 ரஷ்யர்கள் கடந்த ஞாயிறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.(யே)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி. பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

103

## ஐந்தாம் பகுதி

## இஸ்லாமியரின் சட்டம்

## 1. இலங்கையில் முஸ்லிம்கள்: சில வரலாற்றுக் குறிப்புகள்

### இராசதானியில் முஸ்லிம்களின் செல்வாக்கு

முஸ்லிம்களிற் சிலர் இராசதானியிலே செல்வாக்குப் பெற்றிருந்தனர் அரசனுடைய விசுவாசத்தைப் பெற்றிருந்தோரிற் சிலரிற் மிகமுக்கியமான பணிகள் சில ஒப்படைக்கப்பட்டன அயல் நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கும் பிரதேசங்களின் தூதுவர்களை வரவழைத்து இவர்களேடு பேச்சுவார்த் தைகளை நடத்துவதற்கும் முஸ்லிம்களைக் கண்டிமன்னர்கள் பயன்படுத்தினார்கள் கி.பி 1762ஆம் ஆண்டிலே ஜோன் பைவஸ் (john Pybus) என்பவர் கண்டியரசனோடு பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கென்று பிரித்தானியத் தூதுவராகச் சென்றிருந்தார். அவரை வரவேற்று, திருகோண மலையிலஜிருந்து ராசதானிக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு முஸ்லிம் பிரதானியை நியமித் தனர். மௌல முகாந்திரம் என்பவனின் மகனே இவ்வாறு நியமிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது வேறொரு சமயத்திலே மௌல முகாந்திரத்தின் இன்னோரு மகனான உதுமா லெவ்வை என்பவ னைக் கர்நாடகத்துக்கு நவாபு முகமது அலியிடம் தூதுவனாக கண்டியயரசன் அனுப்பியிருந்தான் ஆங்கிலேயரின் ஆதரவைப்பெற்றுக்கொள்ளவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவதற்கென உதுமா லெவ்பையினை அரசன் தென்னிந்தியாவிற்கு அனுப்பிவைத்தான். படைகளிற் சேர்ப்ப தற்கு தென்னிந்தியாவிலிருந்து ஆட்களைக்கூட்டிக்கொண்டுவருவதற்கு ஒருமுறை அரசன் மௌல முகாந்திரத்தை அனுப்பிவைத்தான்.மௌல முகாந்திரத்தின் குடும்பத்தினர் செய்த உதவி களுக்கு பிரதி யுபகாரமாக அவர்கள் வியாபாரஞ் சம்பந்தமாக திரைசேரிக்கு செலுத்த வேண்டிய 2000 பகோடாக்கள் வரையான தொகைப்பணமாகிய கடன் ரத்துச் செய்யப்பட்டது. "இலங்கை யின் ஏனைய பகுதிகளிலும் தென்னிந்தியாவிலும் நடைபெறும் விசயங்களைப் பற்றி முஸ்லிம் வியாபரிகளின் மூலமாக அரசன் அறிந்து கொள்ளவான்.

அரண்மனையில் உள்ள மருத்துவசாலையிலும் முஸ்லிம்கள் சேவைபுரிந்தமைக்கான சான்று கள் உண்டுஅவர்கள் அங்கு மருத்துவராகக் கடமைபுரிந்தனர். அரண்மனையைச் சேர்ந்த மருத் துவசாலையின் தலைவருக்கு வெத்கே முகாந்திரம் நிலைமை என்று பட்டங்கட்டுவது வழமை. சிலகாலங்களில் முஸ்லிம் வைத்தியர்கள் அப்பதவிப் பெயரைப்பெற்றனர். ராஜபஷ வைத்திய திலக கோபால என்ற பட்டப்பெயரைப் பெற்றிருந்த குடும்பத்தைச்சேர்ந்த முஸ்லிம் வைத்தியர்கள் பல தலைமுறைகளாக இராச வைத்தியராகக் கடமைபுரிந்தனர். ராஜபஷ வைத்தியதிலக கோபால முதலியாருக்கு உடுநுவரையில் உள்ள சிதுறுவனத்தில் அரசன் 1747 இல் நிலம் வழங் கியமை பற்றிய சாசனக்குறிப்புண்டு. 1778இல் பூவேலிக்கடை வெதறால்லாகே அபூபக்கர் பிள்ளை என்பவர் அரண்மனையிலே வைத்தியராக கடமைபுரிந்தமை பற்றிய ஆவணக் குறிப் புண்டு. இரண்டாம் ராஜாதி ராஜசிங்கனின் தேவியருள் ஒருத்தியான அலுகம துக்கன்ன பெருமாளை கொடிய நோயினின்னறுங் குணப்படுத்தியதால் அவருக்குத் தஸ்கர என்னுமிடத்தில் நிலமானியம் வழங்கினார்கள். கண்டிராச்சியத்திலே உனானி மருத்துவ முறையினை அறிமுகம் செய்த முஸ் லிம்கள் அதை மேலும் விருத்தி செய்தார்கள் போலத் தேரிகிறது. அந்தமுறையிலே தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் அரண்மனையிலே மருத்துவராக நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடற் குரியது.

## 2.சோனகர் அல்லது முகம்மானின மத்துமுள்ளூர்ச் சாதிகளின் பேரிலே கொடுக்கப்படுகிற நியமமான கட்டளைகள்

### முதலாம் வாசகம்

### துடற்சியினுடையவும் மத்துஞ் சகலவுருமைப் பேரிலேயும் சொல்லப்படுகிற காரியம்

1.புருசன் அல்லது பெண்சாதி ரெண்டு பேரில் ஒருத்தர் பிள்ளை இருக்க அல்லது இல்லாதே காலஞ்செண்டு போன தறுவாயில், உயிருடனே இருக்கிறவர்கள் அந்த ஆஸ்தியில் தாங்கள் கொண்டு வந்த சீதனத்தைப் பிறம்பாக எடுத்துக் கொள்ளவும் , அதேனென்றால் தங்களுக்குள்ளே இருக்கிற தட்டு முட்டுகளிலே பரிசனை இல்லதா படியால்

2. புருசன் மரணித்து,அவன் பெண்சாதிக்குப் பிள்ளைகள்இல்லாமலும், அந்தப் புருசனுடைய முடுகின உறிவின் முறையார் இல்லாமலும் இருந்தால் அப்போது சாவுச்சிலவும் அவன் கொடுக்க வேண்டிய கடன்களும் யாதாமொருதருக்கு நியமித்து வைக்கப்பட்ட உருமைப் பங்குகளும் எடுத் துப்போட்டு மரணித்துப் போன புருசனுடைய ஆஸ்தியை நாலாகப் பகுந்து- நாலிலொரு பங்கு பெண் சாதிக்குஞமத்த மூண்டு பங்கும் எளியவர்களுக்கு.

3. புருசன் மரணித்து ஒரு பெண்சாதியும் ஒரு ஆண்பிள்ளை அல்லது அதிகம் ஆண்பிள்ளைகள் உண்டாய் இருந்தால்,
எட்டிலொரு பங்கு பெண்சாதிக்கு;
எட்டிலேளு பங்கு ஆண்பிள்ளைக்கு
அல்லது ஆண்பிள்ளைகளுக்கு.

4.புருசன் மரணித்து ஒரு பெண்சாதியும் ஒருபெண் மகளுடனே இருந்தால்-எட்டிலொரு பங்கு பெண்சாதிக்கு;
அரைவாசி மகளுக்கு;
எட்டில் மூண்டு பங்கு எளியவர்களுக்கு.

5. புருசன் மரணித்து ஒரு பெண்சாதியும் ரெண்டு பெண்மக்களும் உண்டாயிருந்தால்-
எட்டிலொரு பங்கு பெண்சாதிக்கு;
மூண்டில் இரண்டு பங்கு பெண் மக்களுக்கும்
இருபத்துநாலில் அஞ்சு பங்கு எளியவர்களுக்கு

6. புருசன் மரணித்து ஒரு பெண்சாதியும் மூண்டு பெண்மக்களும் உண்டாய் இருந்தால்-
எட்டிலொரு பங்கு பெண்சாதிக்கு;!
நாலில் மூண்டு பங்கு மூண்டு பெண் மக்களுக்கும்;
எட்டிலொரு பங்கு எளியவர்களுக்கு
இந்தப் பிறகாரமாக அதிகம் பெண்பிள்ளைகள் உண்டாயிருந்தாலும் நாலில் மூண்டு பங்கு ஒழிய அதிகமில்லை.

7. புருசன் மரணித்து ஒரு பெண்சாதியுடனே ஒரு ஆண்பிள்ளையும் ஒருபெண்பிள்ளையும் இருக்கச் சம்பவித்தால்-
எட்டிலொரு பங்கு பெண்சாதிக்கு;
பனிரெண்டில் ஏழு பங்கு பெண்பிள்ளைக்கு.

(தொடரும்)

## பாதிப்புற்ற கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏற் பட்டுள்ள பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று அலரி மாளிகையில் இடம் பெற்றதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகள் விவ காரப் பிரிவின் அதிகாரிகள் ,சுகா தார மற்றம் சமூக சேவை அமைப் பின் அதிகாரிகள், சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி கள் எனப் பலர் கலந்து கொண்டுள் ளனர்.

கிழக்கு மாகாணத்தில் ஏற் பட்டுள்ள மோதல் காரணமாக சுமார் 3ஆயிரம் குடும்பங்கள் அகதி களாகி உள்ளன. இவர்களுக்குத் தேவையான உணவு, நீர் மற்றும் சுகாதார தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே யும் கலந்து கொண்டுள்ளார்.

இதேவேளை,கிழக்கில் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அரசு எந்த வித உதவிகளையும் வழங்க வில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

(உ)

## பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக புதுவருட போட்டி நிகழ்வுகள்

பாதுகாப்புப் படைக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எம். டி.எஸ். சந்திரபாலவின் தலைமையில் வசா விளான் ஆசிரியர் பயிற்சி பாட சாலை மைதானத்தில் கடந்த 11ஆம் திகதி முழுநாளும் புதுவருட நிகழ்ச்சி நடைபெற்றது. யாழ். பாது காப்புப் படைத் தலைமையாகத்தின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள், சிப் பாய்கள், இராணுவ சிவில் சேவை யாளர்கள் என பலர் கலந்து கொண்ட இந்த புதுவருட நிகழ்வில், காலை 8.30 மணிக்கு கட்டளை அதி காரியுடன் வருகை தந்திருந்த உயர் அதிகாரிகளினால் குத்து விள்க்கு ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்ச் சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த புதுவருட நிகழ்ச்சியில் இவ் வருட ராஜா, ராணி தேர்வு, மரதன் ஆண், பெண், வலைப்பந்து ஆண், பெண், கயிறு இழுத்தல் ஆண் பெண், சறுக்குமரம் ஏறுதல், தடை தாண்டி ஓட்டம் ஊசியில் நூல் கோர்த்தல், முட்டை பிடித்தல்,விநோத உடைப்போட்டி , தலையணையடித் தல்,ஒலையிழத்தல், சிறந்த வீடு தெரிவு செய்தல் போன்ற போட்டி கள் இடம்பெற்றதுடன், இதில் வெற் றியீட்டிய ஆண்,பெண் இருபாலா ருக்கும் பிரதம விருந்தினர்களா கக்கலந்துகொண்ட யாழ். பாது காப்பு கட்டளை அதிகாரி உட்பட உயர் அதிகாரிகளினால் பரிசில் களும் வழங்கப்பட்டன.







# பொலநறுவ இராணுவ முகாமில் காத்திருக்கிறார் கருணா!

(கொழும்பு)
தமிழழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்



களையடுத்துத் தலைமறைவாகிய கருணா பொலநறுவ இராணுவ முகாமில், இராணுவ பாதுகாப்பில் தங்கியிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் கருணா ஒரங்கட்டப்பட்ட தொப்பிகல காட்டுப் பகுதியில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான "பெல்" ரக ஹெலிக்கொப்டர் இரண்டு பல தடவைகள் வந்து இறங்கிச் சென்றதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பலமுறை ஹெலிகள் வந்து இறங்கிய போதும் கருணா நிலைகொண்டிருந்த இடத்தை அவர்களால் சரியாக ஊகிக்க முடியாமையினால் அவை திரும்பிச் சென்றதாகவும் இறுதியில் மாலை வேளையில் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு கருணா வரவழைக்கப்பட்டு அங்கிருந்து பாதுகாப்பாக அவர் பொலநறுவை இராணுவ முகாமிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கருணாவின் விவகாரத்தில் சந்திரிகா அமையாரின் கைகளை மேற்குலகம் வலுவாகக் கட்டிப் போட்டதால் அவரால் எதுவும் செய்யமுடியாமற்போனதோடு, முறுகலோடு ஆரம்பித்திருக்கும் ஜே.வி.பியினருடனான தேன் நிலவும் பயணம் ஆரம்பத்திலேயே சிக்கல் நிலையில் உள்ளதால் கருணாவிவகாரத்தில் ஜனாதிபதியின் பழைய தந்திரோ பாயங்கள் பலிக்கவில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை ஒரு புறம் இருக்க கருணாவின் பின்னணியில் இருந்தவர்கள், அமெரிக்கரா, பாகிஸ்தானியரா, இந்தியரா என்று கொழும்புப் பத்திரிகை உலகம் தலையைப் பிய்த்துக் கொண்டு குழம்பும் இவ்வேளையில் கருணா மலேசியாவுக்கும் அழைத்துச் செல்லப்படுவார் என்று அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்று கருத்து வெளியிட்டன.(யே

## ஹக்கீம் –நந்ததேரர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)
தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூவ் ஹக்கீம், ஜாதிக ஹெல உறுமயக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான சங்கைக்குரிய உடவத்த நந்த தேரரைச் சந்தித்துப் பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு பற்றியும் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பங்குபற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக கட்சிக்கு ஆதரவு தெரிவித்து வந்த ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி, ஜாதிக ஹெல உறுமய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துள்ளமை தமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவித்தார். (தி-60,10)

# மக்கள் நலனைக் கருதாவிடில் போராட்டங்கள் வெடிக்கும்

## புதிய அரசிற்கு சோமவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படாவிடில் பல லட்சக் கணக்கான மக்களைத் திரட்டி அரச எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாக ஆட்சி அமைத்துள்ள அரசாங்கத்தினால் நாமும் நாட்டு மக்களும் பலத்த சவால்களை எதிர்கொள்கிறோம். மக்களின் நன்மை கருதியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கப் பட்டது.

இந்தக் கூட்டுமுன்னணியில் ஜே.வி.பியும் இணைந்து கொண்டாலும் தனது அடிப்படைக் கொள்கைகளை அது இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை.

இதனால் மக்கள் எம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். இதனைக் குழப்பியடிப்பதற்குச் சில தீயசக்திகள் முனைகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செல்வாக்கினை ஜே.வி.பியினர் கைப்பற்றி விட்டதாக ஐக்கிய தேசியக்கட்சி முதலைக்கண்ணீர் வடிக்கின்றது. இதனை நம்பவேண்டாம் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (தி-4,6)

# பிரதேச வாதத்தில் குளிர்காய முயன்ற ஊடகங்களுக்கு ஏமாற்றம்

கருணாவின் பிரச்சினைகளைப் பூதாகரப்படுத்தி, சர்வதேச மட்டத்தில் பிரதேசவாதத்தைத் தூண்டுவதற்கும், விடுதலைப் புலிகளுக்கெதிரான பிரசாரத்தை முடுக்கி விடுவதிலும் கடுகதியில் உழைத்த பல சர்வதேச ஊடகங்கள் பெரும் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு தமிழ்அலை உட்பட, ஐரோப்பா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் இயங்கும் சில ஊடகங்கள், கருணாவின் பிரச் சினை குறித்து, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளி யிட்டமை, பொய் வதந்திகளைக் கட்டவிழ்த்து விட்டமை, கருணா கிளப்பிய பிரதேசவாதத்திற்கு வக்காலத்து வாங்கியமை, மக்களைப் பீதிக்குள்ளாக்கியமை போன்றவை உட்பட, அவசியமற்ற தகவல்களை அநாமதேய ஊடகங்களை மேற்கோள் காட்டி தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த நிலையில், திடீரென கருணா குழுவினர் பின்வாங்கியதுடன், கொழும்புக்குத் தப்பியோடியும் விட்டனர். இந்நிலையில், இவ்வூடகங்கள் மிகப் பெரும் வெறுப்பும் ஏமாற்றமும் அடைந்துள்ளன, இத்தகைய செயலில் ஈடுபட்ட ஊடகங்கள் சில, வேகமாகவே சுதாகரித்துக்கொண்டு மீண்டும் கருணாவுக்கு எதிரான செய்திகள் சிலவற்றைப் பிரசுரித்து, தங்களது பக்கச்சார்பு நிலையை மீண்டும் நியாயப்படுத்த முயல்வதாக சில செய்திகள் கருத்துத் தெரிவிக்கின்றன. இந்த நெருக்கடியான காலப்பகுதியில், நேர்மையுடன் செயற்பட்ட சில சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ள கருத்தில், தமிழ்த் தேசியத்தின் ஒட்டு மொத்த வெற்றிக்காக அனைத்து ஊடகங்களும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்து, இனிவரும் காலத்தில், ஓர் தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்த் தேசியத்தின் ஒன்றுபட்ட இனவிடுதலையை நோக்கி அனைத்து ஊடகங்களும் செயற்பட வேண்டுமென்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (தி-18)

## புதிய மண்டபம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)
புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியில் பவள விழாவை முன்னிட்டு 120 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அதிபர் க.குமாரசாமியின் நினைவாக இம் மண்டபம் அமைக்கப் படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருகின்றது. (தி-18)

# ஐ.ம.சு.மு. இணைவு பேச்சுக்கே இடமில்லை

## என்கிறார் ம.ம.மு.தலைவர்

(கொழும்பு)
இனப்பிரச்சினை சம்பந்தமான எந்தவித தெளிவான நிலைப்பாடும் இல்லாத மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

"மலையக.மக்கள் முன்னணி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்ளவுள்ளது" என சில விஷமிகள் வதந்தி பரப்பி வருகின்றதாக சுட்டிக்காட்டிய அவர்,

வெற்றி பெறுகின்ற கட்சிகளின் காலடிகளில் எல்லாம் பதவிக்காகவும் சுயலாபம் பெறுவதற்காகவும், தாம் ஒரு போதும் அவர்களின் காலடிகளில் விழப் போவதில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைவது பற்றி தாம் ஒரு போது கூடி ஆராயவுமில்லை. முடிவெடுக்கவும் இல்லை.

வட கிழக்குக்கு வெளியே குறிப்பாக சிறுபான்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் எல்லாம் ஐக்கிய தேசியக்கட்சிக்கே சிறுபான்மை மக்கள் வாக்களித்துள்ளார்கள்.

சிறுபான்மை மக்களின் நலன் கருதி செயற்படும் ஒரே ஒரு கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கே எமது ஆதரவுகிடைக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி குறுகிய காலத்திற்கே இருக்கும். அதன் பின்னர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (தி-61,10)

# கிழக்கில் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரங்கள்

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணப் பிரதேசங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டமையை இட்டு, அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரங்களில் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கருணா சில தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் புலிகள் அமைப்பில் பிரிவினையை உருவாக்க முனைந்துள்ளார். இதற்கு அப்பகுதி மக்களையும் துணை போகுமாறு வற்புறுத்தி வந்துள்ளார். தனது போக்கினை நியாயப்படுத்தி மக்களைக் கவர்வதற்காக பிரதேச வாதக்கருத்துகளையும், பொய் பிரசாரங்களையும் முன் வைத்தார்.

கடந்த 9 ஆம் திகதி தளபதிகளான, சொர்ணம், பானு, நாகேஸ் ஆகியோரின் வழிநடத்தலில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புக் கட்டளைத் தளபதி ரமேஷ் தலைமையிலான ஜெயந்தன் படையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி மாலதி விசேட படையணி ஆகியன கிழக்கு மாகாணத்தில் உள்ள கருணாவின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்கும் பணியில் நடத்திய போரில் வெற்றியும் கண்டன,

தமிழீழ விடுதலைப் புலிகள் அணியின் இம் மீட்பு நடவடிக்கைகளை வரவேற்றுள்ள கிழக்கு மாகாண மக்கள், புலிகள் கட்டுப்பாட்டில் தமது பிரதேசம் வந்துள்ளதுடன், தமிழ் தேசிய தலைமையின் கீழ் தமிழினத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த ஓர் சந்தப்பம் மண்டும் உருவாகியுள்ளமையை இட்டு மகிழ்ச்சி ஆரவாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

(தி-4,63)

# ஆலயங்களின் ஊடாக அபிவிருத்தியின் நுழைவாயில்

## சிறப்பாக முன்னெடுப்பு

(தொல்புரம்)
மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தினால் உணவு பதனிடல் வெதுப்பக தயாரிப்புகளுக்கான தொழில் பயிற்சிகள் நடாத்தப்படவுள்ளன.

இதேவேளை, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில பாடம கற்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டோருக்கு ஆங்கில பயிற்சி வகுப்புகளின் தொடர் நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுளளதுடன், ஆயலங்களின் ஊடாக அபிவிருத்தியின் நுழைவாயில் என்னும் மாதிரி அபிவிருத்தித் திட்டததின் கீழ், மூளாய் முத்துக்குமார சுவாமி கோயில் சுற்றாடலில் உள்ள நிறுவத்தால் தெரிவு செய்யப்பட 12 பயனாளிகளுக்கு அண்மயில் நடைபெற்ற ஆலய தேர்த் திருவிழாவின் போது மானிய உதவிக் கொடுப்பனவு புத்தகம் வழங்கப் பட்டது. தவிர நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற ஆங்கில மனித விழும்பிய வகுப்புகளினதும் தொடர்ச்சியும் பொன்னாலை கல்விளான் கிராமத்தில் உள்ள சிறுவர்களுககாக நடாத்தப்பட்டு வருகின்ற அறநெறி வகுப்புகளின் தொடர்ச்சியும் ஆரமபிக கப்பட்டுள்ளது.

(உ-70)

# தாரண வருட வாழ்த்துச் செய்திகள்

## மக்களின் ஆணையை என்றும் மறக்கமாட்டோம்

(யாழ்ப்பாணம்)


நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்கிய தீர்ப்பை ஆணையாக ஏற்று அவர்களுக்காக உழைப்போம் என இப்புத்தாண்டில் உறுதி கொள்வோம்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் செய்தி மேலும்,

தைபிறந்தால் வழி பிறக்கும் என்று தைப்பொங்கல் திருநாளை கொண்டாடிய தமிழ் மக்கள் புத்தாண்டில் பொங்கி மகிழ்ந்து நல்லதே நடக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் தாரண வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றனர்.

அழிந்து போன எம் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்பிட மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நாடுகள் உவர்ந்தளித்த நிதி ஆதரவுகளைப் பயன்படுத்தி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதே எமது முதற்பணி



யாகும். எமது தமிழ் மக்களின் தீர்ப்பை ஆணையாக ஏற்றுத் தமிழர் தேசத்தின் சுதந்திரத்திறகும், மக்களின் விடிவுக்கும் தொடர்ந்தும் எம்மை அர்ப்பணித்து உழைப்போம் என இப் புத்தாண்டில் அனைவரும் திடசங்கற்பங் கொள்வோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமாதானம் மிக்கதாக புத்தாண்டு அமையட்டும்

(யாழ்ப்பாணம்)

மலரும் புத்தாண்டு சமாதானம், சௌபாக்கியம் மிக்கதாக அமைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாக, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டையொட்டி பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள வாழ்ததுச் செய்தியிலேயே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஆரம்பத்தில் இருந்து நீங்கள் பிரயோசனம் அடைந்துள்ளீர்கள். இந்த சூழ்நிலையைப் பெற்றுத்தருவதற்கு, பாதுகாப்பு படையினர் அவர்களின் முழு ஒத்துழைப்பையும், பலத்தையும் வழங்கியுள்ளார்கள். இதுவரை காலமும்



பாதுகாப்புப் படையினருக்கு நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பை நாங்கள் மிகவும் உயர்வாகக் கருதுவதுடன், எதிர்காலத்திலும் அப்படியான ஒத்துழைப்பையே எதிர்பார்க்கின்றோம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் அமைதியாக நடைபெற்றதற்கு இராணுவமும், பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டதுடன், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு நீங்கள் எடுத்த உற்சாகத்திற்கும் நன்றி கூறுவதற்கு நாங்கள் இந்தச் சந்தர்பத்தை பயன்படுத்துகின்றோம். நிரந்தரமான சமாதானத்திற்கு இது உதவும் என்று நம்புகின்றோம்.

இரண்டு இனமாகத் தெரியும் நாங்கள் மார்க்கத்திலும், கலாச்சாரத்திலும் சமமானவர்கள் என்று காட்டுகின்ற வேளையில் நம் இரண்டு இனத்திற்கும் தேவையானது சமாதானம். இப்போது நாடுபூராகவும் எதிர்பார்த்திருக்கும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எம்மால் முடிந்தளவு சேவை செய்வோம் என்று உறுதியளிக்கிறோம்.

பிறக்கும் புதுவருடத்தை, சமாதான, சௌபாக்கியமாக மகிழச்சியுடன் கொண்டாட பிரார்த்திக்கின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுளளது.

## தமிழ் சிங்களப் புத்தாண்டில் இன ஐக்கியம் வளர வேண்டும்

தாரண புதுவருடத்தில் நாட்டில் நிரந்தர சமாதானமும் நீடித்த அமைதியும் நிலவுவதற்கும் சகல இன மக்களும் மகிழ்ச்சியான



வாழ்வு வாழ்வதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

புத்தாண்டு தினத்தையொட்டி விவசாய விற்பனை அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் தமிழ் மொழிமூல பாடசாலைகள் அபிவிருத்தி வடக்கு தொழில் பயிற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு நிலைபெறுவதற்காகப் பாடுபட்டு வருபவர்கள் என்ற வகையில் புத்தாண்டு தின வாழ்த்துச் செய்தியை விடுவிப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.


தமிழ் - சிங்கள புத்தாண்டுப் பிறப்பில் காணப்படுகின்ற இன ஐக்கியம் மென்மேலும் செழித்து வளர்வதற்கு ஒவ்வொருவரும் தத்தமது பங்களிப்பை நல்க முன்வரவேண்டும். இனங்களின் தனித்துவம் என்பது பகைமையை வளர்க்கும் கூறுகளாகவோ, முரண்பாடுகளை வளர்க்கும் பகுதிகளாகவோ அல்லாமல் இணக்கத்தை ஏற்படுத்தும் அம்சமாக வளர்த்து எடுக்கப்பட வேண்டும். இதன் மூலமாகவே இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெறும்.

எல்லாரும் எல்லாமும் பெற்று இந்நாட்டில் குதூகலமாக வாழும் சூழல் உருவாக தம்மாலான முயற்சிகளை வழங்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். பண்டிகைக் கால மகிழ்ச்சி எந்நாளும் நீடிக்கட்டும்!

## எமது சரித்திரத்தை நாமே எழுத வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது சரித்திரத்தை நாமே எழுதத்தக்க வகையில்



இத்தேர்தலில் வாக்களிக்க 'வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்றுச் செயல்பட்ட தமிழ் மக்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகூற விரும்புகின்றோம்.

இவ்வாறு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை நாடாளுமன்றத்திற்கான 13ஆவது பொதுத் தேர்தல் 38 ஆண்டுகளின் பின்னர் வன்செயல்கள் அற்ற அமைதியான முறையில் நடந்தேறியிருப்பது மகிழ்வைத் தருகிறது. தமிழ் மக்கள் அனைவரும் மீண்டும் ஒருதடவை சமாதானத்திற்கான தமது விருப்பில் தாம் ஒன்றாக இருப்பதாக சர்வதேச உலகத்திற்கு பகர்ந்திருக்கிறார்கள்.

யுத்தம் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்ற இலங்கை வாழ் தமிழ் மக்களின் எண்ணப்பாட்டை முழு உலகும் தெளிவாக உணர்ந்துள்ள வேளையில் இனி நடை பெறவிருக்கும் சம்பவங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு சாதகமாகவே அமையும் என நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம். இருபது ஆண்டு காலப் போர் அழிவுகளின் பின்னர் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான இவ் வேண்டுகோளை சர்வதேச உலகம் ஏற்று தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு கிடைக்க தமது பங்களிப்பை செய்யவேண்டிய முக்கியமான காலகட்டம் இதுவாகும் என்பதை மிக உறுதியாக வலியுறுத்த விரும்புகிறோம்.

இலங்கை அரசியல் சரித்திர வரலாற்றில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இருகட்சிகள் இலங்கை மண்ணின் இறைமையையும், சுதந்திரத்தையும் கருத்திற் கொண்டு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக தம்மை ஏதோ ஒரு வகையில் விட்டுக்கொடுக்க வேண்டிய ஒரு காலகட்டம் உருவாக வேண்டும். இவ்விரு கட்சிகளின் இரு பிரதான தலைவர்களாக ஜனாதிபதியும், ரணிலும் இவ்விடயத்தில் பிரிந்து நிற்பது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை தரப்போவதில்லை. பரம்பரை அரசியல் குடும்பத்தைச் சார்ந்த ஜனாதிபதி இலங்கையில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை முதன் முதலில் பகிரங்கமாக ஏற்றுக் கொண்ட சிங்களத் தலைவர் ஆவார். இலங்கை மண்ணில் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தவரும் அவரே. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை மண்ணில் சமாதானத்தை ஏற் படுத்த தம்மாலான அனைத்து முயற்சிகளையும் கடந்த காலங் களில் செயற்படுத்தியுள்ளார். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் இந்த இரண்டு தலைவர்களும் சமாதானத்தை முன் வைத்தே தேர்தலிலும் போட்டி யிட்டுக் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தமது தனிப்பட்ட முரண்பாடுகளை விட்டு நாட்டின் நன்மை ஒன்றையே கருத்திற் கொண்டு தேசிய அரசு மூலமாகவோ அல்லது வேறு புரிந்துணர்வு முயற்சிகள் மூலமாகவோ பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்த வேண்டுமென இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் வேண்டிக் கொள்கிறோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலக்கட்டத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் நிகழ்ந்த மிகவும் துரதிஷ்டவசமான ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. இச் சம்பவமானது தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது. உயிர் இழப்புக்களாலும், இரத்தக் களறிகளாலும் பெற்ற இன்றைய அமைதி நிலையையும் தமிழ் மக்களின் போராட்ட வாழ்வையும் அர்ப்பணத்தையும், பிரதேசவாதத்தினாலோ, எந்த தனிமனித பிரிவினாலோ கூறுபோடவோ, கொச்சைப்படுத்தவோ முடியாது என்றே நாம் கருதுகிறோம். தீமையில் இருந்து நன்மையையும், அழிவில் இருந்து ஆக்கத்தையும் தர வல்ல இறைவன் இச்சம்பவத்தை தமது வல்லமையால் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கத்தக்கதாக நிச்சயம் மாற்றுவார்.

சிங்கள தமிழ் புத்தாண்டும் வழமைபோல உயிர்ப்பு விழா காலப்பகுதியில் மலர்கின்ற வேளையில் இப்புத்தாண்டினைக் கொண்டாடும் மக்கள் அனைவரையும் நினைத்து மனமகிழ்வோடு எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். சிங்கள தமிழ் புத்தாண்டு நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னணியில் இலங்கை மண்ணில் அமைதியையும் சமாதானத்தையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் கொண்டுவர இறைவன் அருள்பாலிப்பாராக.

## இந்தப் புத்தாண்டில் நிரந்தர சமாதானம் மலரும்

(யாழ்ப்பாணம்)

நேற்று மலர்ந்த புத்தாண்டு நிரந்தர சமாதானத்தை உருவாக்கும். இதனையே வடக்கு -கிழககுப் பகுதிகளில் உள்ள மக்கள் அன்று தொட்டு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ் கூட்டமைப்பின் இணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் விடுத்துள்ள புத்தாண்டு தினவாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இரண்டு வருட யுத்த நிறுத்தம் 6 சுற்றுப் பேச்சுவார்த்தை ஆகியவற்றுக்குப் பின்னர் பிறக்கின்ற 3ஆவது தமிழ் புத்தாண்டு இது. பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு பெருந்தெருக்கள் திறக்கப்பட்டு மக்கள் ஓரளவு அமைதிக் காற்றைச் சுவாசிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருந்த போதும் கூட, அது முழுமையானதாக இல்லை. இன்னும் அதி உயர் பாதுகாப்பு வல [illegible]



பும் மக்களை மிகவும் கஷ்டத்துக்குள்ளாக்கியே வருகின்றது.

மறுபுறத்தில் நடந்து முடிந்த 13ஆவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழத் தேசியக் கூட்டமைப்பை மிக அதிகப்படியான ஆசனங்களுடன் வெல்ல வைத்தாலும் புதிய அரசாங்கம் அதனை உதாசீனம் செய்து தனது சொந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே செயற்பட முனைகின்றது.

நிரந்தர யுத்த நிறுத்தம், நிரந்தரத் தீர்வு, அதற்கான பேச்சுவார்த்தை என்பதற்குப் பதிலாக அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி, அதன் மூலம் அரசியல் சாசனத்தை மாற்றி, தான் பிரதமராக வேண்டும் என்பதே இன்றைய ஜனாதிபதியின் அவசரத் தேவையாக உள்ளது.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் குழுக்களின் தயவில் தங்கி இருக்கக் கூடிய ஜனாதிபதி பேச்சுவார்த்தையை சரியான வழியில் முன்னெடுத்துச் செல்வார் என்று நம்புவதற்கான எந்தவொரு சாத்தியக் கூறுகளும் இல்லை. அறுதிப் பெரும்பான்மையற்ற, குழப்பகரமான சிந்தனை களின் மொத்த வடிவமாகவே இன்றைய புதிய அரசு இருக்கின்றது.

இவ்வளவு குழப்பங்களுக்கு மத்தியில் தமிழ் புத்தாண்டு மலர்ந்தாலும் இப்புத்தாண்டு குழப்பங்கள் மறைந்து, நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் புத்தாண்டாக அமைய வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி - குறள்

வலம்புரி

# பதவிக்காக மட்டுமே அரசியல் மாற்றங்கள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது பாராளுமன்றம் எதிர்வரும் 22ஆம் திகதி கூடுகிறது. ஆட்சிக்கலைப்பை அடுத்து நடந்த தேர்தல், பெரும்பான்மைப் பலத்தை எந்தக் கட்சிக்கும் வழங்காத போதிலும் கூடிய வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விரும்பியோ, விரும்பாமலோ ஆட்சியமைக்கும் பணியை தொடர்ந்துள்ளது. ஜே.வி.பியை நம்பி கூட்டமைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு ஆட்சியின் ஆரம்பத்திலேயே ஜே.வி.பி தலையிடி கொடுக்கத் தொடங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மை பலத்தை நிருபிப்பதற்குத் தேவையான ஆதரவை ஹெலஉறுமயவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆரம்பத்தில் உத்தரவிட்ட ஜே.வி.பி இரண்டாவதாக அமைச்சரவைப் பதவியேற்பில் கலந்து கொள்ளாது புறக்கணித்தது.

இவ்வாறு , ஆடு அறுக்கமுன்னதாகவே ஆணத்திற்கு சட்டி நீட்டும் நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆட்சி எதுவரை நீடிக்கும் என்ற கேள்வி, வாக்களித்து விட்டு மௌனமாக வீடு களில் இருக்கும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. தமது பதவியைத தக்கவைப்பதற்காக என்னென்ன மாற்றங்கள் எங்கெங்கு செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு அரசியல் தலைவர்கள் தயாராக இருக்கின்றனர்.

அதற்காகவே பெரும்பான்மைப் பலத்தோடு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரண்டு வருட ஆயுளுடன் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்தார். இதன்விளைவாக நாட்டின் பொருளாதாரம் வீணே செலவாகியது. இருந்தும் நல்லதோர் ஆட்சியைப் பெற்றுக்கொள்ளமுடியாது போனது.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த ஜனாதிபதி தனது பதவியில் கண்ணாயிருந்தாரே தவிர ஜே.விப்யுடன கூட்டுச்சேர்ந்து ஆட்சி நடத்தலாமா? சமாதானத்தை முன்னெடுக்கலாமா? என்பதுபற்றி எதுவித கவனமும் செலுத்தவில்லை.

தனது பதவியைத் தக்கவைப்பதென்பதே ஜனாதிபதியின் இலக்கு என்பதை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து இராஜினாமாக்கடிதம் பெற்றுக்கொண்டதன் மூலம் உணர்ந்து கொள்ளமுடியும். ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றுவதும், அதனூடாக பாராளுமன்றத்திற்கு வெளியில் அரசியலமைப்புச் சபையை உருவாக்கி ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது - விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பனவற்றை நடைமுறைப்படுத்தியதும், மீண்டும் தானே பிரதமராகவிருந்து ஆட்சி செய்வது என்ற படிமுறை ஒழுங்கில் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற அதிகார ஆட்சி கொண்டுவரப்பட்டதும் ஜே.வி.பியுடனான கூட்டு உடைந்தாலும் பரவாயில்லை. மீண்டுமோர் தேர்தலை நடத்தி அதில் அறுதிப் பெரும்பான்மையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கைப்பற்றுவது என்ற கற்பனை வாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கைங்கரியங்கள் நடந்தேறுகின்றன.

இவ்வாறாக தென்னிலங்கை அர்சியல் கட்சிகளும், ஆட்சியாளர்களும்தங்களின்பதவி யைக்காப்பாற்றுவதில் தீவிரகவனம் செலுத்துகின்றனரே தவிர, நாட்டு நலம், மக்கள் நலம் என்பவற்றில் எதுவித அக்கறையும் கிடையாது. இத்தகைய போக்குகள் சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களிற்கு நல்லதொருமுடிவை வழங்க மாட்டாதென்பது உறுதி.

# சமாதானப் பேச்சுக்களை இலகுவாக முன்னெடுக்க உரிய தருணம் இதுவே

## அரசியல் பேராசிரியர் லக்ஷி பெர்ணான்டோ

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், அரசாங்கமும் ஒரே கட்சியாக இருப்பதால் சமாதான நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக அரசியல் பிரிவின் பேராசிரியர் லக்ஷி பெர்ணான்டோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த போட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் சட்ட வாக்கு அதிகாரம் கொண்ட பாராளுமன்றத்திற்கும் இடையில் கடந்த காலத்தில் இருந்து வந்த பிரச்சினைகளே சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருந்து வந்தன.

அத்துடன், நிறைவேற்று அதிகாரத்திற்கு முன்னுரிமை அளித்துள்ள ஓர் அரசியல் அமைப்பில் ஜனாதிபதியை உதாசீனம செய்வது மாபெரும் தவறாகும்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் போது அதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் உதாசீனம்செய்யக்கூடாது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.

அவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க அரசியல் யாப்பு தடையாக இருக்குமானால், அந்த அரசியல் யாப்பை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-60,10)

# 3 கொள்கைகளை முன்வைத்து நிதி அமைச்சு சேவையாற்றும்

## அமைச்சர் அமுனுகம

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் நிதி அமைச்ச மூன்று பிரதான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே செயற்படும் என்றும் நிதிப்பாவனையில் நேர்மை உற்பத்தி அதிகரிப்பு மற்றும் பொருளாதார ரீதியாக நலிடைநதோருக்கு உதவி புரிதல் ஆகியனவே இந்த 3பிரதான கொளகைகள் எனவும் நிதி அமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற ஊடாகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இநத 3 கொள்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுடன, ஊழல் வீண்வரயம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளில் 30 வீதத்தை மட்டுமே பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருந்ததாகச் சுட்டிக் காட்டிய அமைச்சர்,

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம்வெளிநாட்டு உதவிகளில் 90 சத வீதத்தை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார். (உ-61,10)

# அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஜனாதிபதி மும்முர நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் யாப்பை சீர்திருத்துவது பற்றிய விரிவான கலந்துரையாடல் ஒன்றை விரைவில் நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.



செயல்திறன் மிக்க ஆளுமைக்கு இடையூறாக 1978 ஆம ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பைத் திருத்தி புதிய அரசியல் சாசனத்தை அறிமுகப்படுத்துவது பற்றி இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல்யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு பாராளுமனறத்தில் பெரும்பான்மையை பெறமுடியாதிருப்பதால் புதிய அரசியல் யாப்புக்கான நகல் ஒன்றை உருவாக்கி வெகுஜன அப்பிராய வாக்கெடுப்புக்காக மக்கள் முன் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பான முதல் சுற்றுப்பேச்சுவார்த்தைகள் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது.

இந்தப்பேச்சுவார்த்தையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைப, ஜயமதி விக்கிரம ரட்ண, பேராசிரிய ரஞ்சித் அமர சிங்க உட்பட பல சட்ட வல்லுநர்கள் கலந்து கொண்டனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள உறுதி மொழிகளை நிறைவேற்றுவதற்கரன முதல் நடவடிக்கையாகவே இந்த அரசியல் யாப்பில் திருத்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருகின்றதாகக் சுட்டிக் காட்டப்படுகிறது. (தி-60,10)

# எள் உற்பத்தி வீழ்ச்சி எண்ணெய் விலை உயர்ச்சி

(நவாலி)

யாழ்.குடாநாட்டில் எள் உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருப்பதையடுத்து, நல்லெண்ணெயின் விலை உயர்வடைந்துள்ளது.

எள் உற்பத்தி செய்யப்படும் நவாலி, ஆனைக்கோட்டை, பண்டததரிப்பு, தாவடிப் பகுதிகளில் இம்முறை எள் உற்பத்தியில் விவசாயிகள் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. அத்துடன் செய்கை பண்ணப்பட்ட எள் அறுவடையும் மிகக் குறைந்தளவிலேயே காணப்பட்டது.

இதனால் எள்ளிற்குத் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே 160 ரூபாவாக விற்பனையான ஒரு போத்தல் நல்லெண்ணெய் தற்போது 200ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (உ-102)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மெதுவாக படிப் படியாக நாம் நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும். இது வேடிக்கையல்ல. ஒருநாள், பல ஆண்டுகள் அல்ல. பல பிறவிகள் ஆனாலும் ஆகலாம் பறவாயில்லை. முயற்சி தொடரவேண்டும். தெரிந்தே நீங்களாகவே முயற்சியை தொடர வேண்டும். அங்குலம் அங்குலமாக நாம் முன்னேறி உண்மையான செல்வத்தை அடைவோம். அதனை நம்மிடமிருந்து யாரும் பிரிக்கவோ, அழிக்கவோ முடியாது. அந்த இன்பத்தை எந்தத்துயரமும் அழிக்க முடியாது.

சுவாமி விவேகானந்தர்.

# இடம் பெயர்ந்தோர் பிரச்சினை குறித்து திருமலையில் ஆராய்வு

(திருகோணமலை)

மட்டக்களப்பு வாகரை சேருவில வெருகலாறு, கஞ்சிகுடிச்சாறு போன்ற பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ப்பட்டுள்ளன. இது தொடர்பான விசேட கூட்டம் திருகோணமலையில் உள்ள வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி யின் ஆலோசகர் பாலபத்த பெண்டி தலைமையிலான குழு வினர் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சுகாதார,மருத்துவ வசதிகள் , அன்றாடப் பிரச்சினைகள் என்பன குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் ஆளுநர் நிதியில்இருந்து 10 மில்லியன் ரூபா நிதியை பெற்றுத் தருவதாக ஜனாதிபதியின் ஆலோசகர் உறுதியளித்துள்ளார். (தி-63)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472

# கருணாவிற்கு புகலிடம் வழங்கினாலும் சமாதானப் பேச்சு பாதிக்காது

## கரிகாலன் பேட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணாவிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர் தனிமனிதனாக இருப்பதால் அவருக்கு இலங்கை இராணுவம் புகலிடம் கொடுப்பது விடுதலைப்புலிகளுடனான அரசின் சமாதானப் பேச்சு வார்த்தையை பாதிக்கமாட்டாதென்று புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் நேற்றிரவு பீபி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் கரிகாலன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கருணா குறிப்பிட்டது போல் கிழக்கின் அபிவிருத்தி ஏற்கனவே நடைபெற்று வந்ததொன்றுதான். கிழக்கின் அபிவிருத்திகள் சிலவற்றைத் தடுப்பதில் கருணா முனைப்புடன் செயற்பட்டு வந்தார். இதனை நாம் நேரடியாக அவதானித்து வந்தோம்

இலங்கை அரசு கருணாவுக்கு புகலிடம் வழங்கி எமது விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தவோ அல்லது விடுதலைப் போராட்டத்தில் பிளவை ஏற்படுத்தவோ முயலலாம், அதுபற்றி தாம் எதுவும் கூற முடியாதுள்ளது என்று கரிகாலன் மேலும் கூறினார். (ம)

# தேர்தல் முறை மாற்றத்திற்கு மக்களின் ஆதரவு பெறப்படும்

## மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 106 ஆசனங்களைப் பெற்றுள்ளதால், சில செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன. இத்தடைகளைக் கடப்பதற்கு மக்களின் ஆதரவு பெறப்படும்.

இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அம்பாறையில் நடைபெற்ற மத வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



நேற்று யாழ். நூலகத்திற்கு முன்பாக புனரமைப்புச் செய்து திறந்துவைக்கப்பட்ட பரி. பேதுரு மெதடிஸ்த தேவாலயத்தின் தோற்றம்.

# அமைச்சுக்களை பங்கீடு செய்வதில்...

பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை கடந்த 10ஆம் திகதி பதவியேற்ற போது ஜே.வி.பி. சார்பில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் குறிப்பிட்ட தினத்தில் பதவியேற்பு வைப்பவத்தில் கலந்துகொள்ளவில்லை.

1971ஆம் ஆண்டின் அப்போதைய் பிரதமர் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசுக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சியின் ஜே.வி.பி. ஈடுபட்ட 33ஆவது ஆண்டு நிறைவு பூர்த்தி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றதாலேயே ஜே.வி.பி. அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவில்லை என்று தெரிவித்தபோதும், உண்மையில் அமைச்சுப் பதவிகள் ஜே.வி.பிக்கு தெரியாமல் ஜனாதிபதி சந்திரிகா மாற்றங்களை ஏற்படுத்தியமையே ஜே.வி.பியின் இன்றைய முறுகல் நிலைக்குக் காரணம் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவைப் பிரதம மந்திரியாக நியமித்தமை முதல் அமைச்சர்கள் நியமனங்கள் வழங்கியதுவரை ஜே.வி.பியின் இணக்கமின்றி ஜனாதிபதி சந்திரிகா தனது ஸ்டப்படி நடந்துகொண்டமை ஜே.வி.பியின் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 65 ஆசனங்களும், ஜே.விபிக்கு 40 ஆசனங்களும் இருக்கும் நிலையில் சுதந்திரக் கட்சிக்கு 31 அமைச்சுக்களும் 31 பிரதியமைச்சுக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஜே.விபிக்கு 4 அமைச்சுக்களும் 4 பிரதியமைச்சுக்களுமே வழங்கப்பட்டுள்ளது. இதுவே ஜே.வி.பியினரைக் கடும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்குள் எழுந்துள்ள உட்கட்சிப் பூசல்களையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்வதற்கு ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக் குழுவைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக்குழு கூட்டம் பெரும்பாலும் இன்று நடைபெறவுள்ளதாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிறேம்ஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் தோன்றியுள்ள அமைச்சுப்பொறுப்பு இழுபறிநிலை உடன் சுமுகநிலைக்குக் கொண்டுவர ஜனாதிபதி சந்திரிகா தவறுவாராயின் கூட்டமைப்பு உடைவதைத்தவிர வேறுவழியில்லை என்று எண்ணுமளவிற்கு தென்னிலங்கை அரசியலில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## 269 போராளிகள்...

இந்நிகழ்வில் மட்டு. அம்பாறைத் தளபதி ராம், மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா மற்றும் சமாதான செயலகத்தின் பிரதி இயக்குநர் பவாநந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதற்கு முன்னரும் பல நூற்றுக்கணக்கான போராளிகள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## துப்பாக்கிச் சூட்டுக்...

கடந்த 9ஆம் திகதி இரவு 10மணியளவில் கருணா குழுவைச் சேர்ந்த இரு போராளிகள் எனது கணவனான மாணிக்கவேல் ச்பாரட்ணத்தை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். அவ்வாறு கூட்டுச் சென்ற சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

எனது கணவனைப் பற்றி தெரிந்த இடங்களில் எல்லாம் விசாரித்தும் பலன் எதுவும் கிட்டவில்லை. நேற்றையதினம் களுவான் கடற்கரைப் பக்கமாகச் சென்றபோது கால்கள் இரண்டும் வெளியே தெரிந்தபடி சடலம் ஒன்று நிலத்தில் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

நிலத்தைத் தோண்டி சடலத்தை வெளியில் எடுத்தபோது அது எனது கணவரது சடலம் என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். மேலும் இரு சடலங்கள் அரை குறையாக நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸார் சடலங்களை எடுத்துச் சென்றனர். ஏனைய இரு சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம)

## சிறுவர்களைப்...

புலிகள் சமாதான முயற்சியில் கொண்டுள்ள பற்றுறுதியையும் இச்செயல் காட்டியுள்ள நிலையில், மேலும் அவர்களிடம் உள்ள போராளிச்சிறுவர்களை விடுவிக்க விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

## கைவிட்டுச்...

மேலும், மட்டக்களப்பில் உள்ள தேனகம் விடுதியும் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த வாகனங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள் என்பனவும் சேதமாக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகள் சென்றதையடுத்து கருணா அணியில் இருந்து விலகிச சென்ற போராளிகள் விட்டுச் சென்ற ஆயுதங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

முகாம்களிலும், வீதியோரங்களிலும் போராளிகளால் கைவிட்டுச்சென்ற துப்பாக்கிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களையும் ஒன்று சேர்க்கும் நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

மறைவான இடங்களில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களைத் தேடிச்சேகரிக்கும் நடவடிக்கையிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர். (த)




யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் ஸ்தாபிதம் - 1932
(சி-7352)